ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 டிசெம்பர் 2008 பார்வை: 52 விலை: ரூபா 70/=



- சிறார் கல்வி
- பாடசாலைக் கலாசாரம்
- உட்படுத்தற் கல்வி
- அகமும் புறமும்
- மாணவரின் பல்வகைமையும் கல்வியூட்டலும்..


## 5ம் தரப் புலமைப் பரீட்சை யாருக்கு உதவுகிறது?

சபா.ஜெயராசா * ந.பார்த்திபன் * ஆர்.லோகேஸ்வரன் * ஏ.சி. யோர்ச் * த.கலாமணி * நிஷா * தெ.மோகனதாஸ் * துரைமடன் * ஆ.கரீம் * காசுபதி நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 10




**விலை: 100.00**

தொடர்பு:
3, டொரிங்டன் அவனியூ
கொழும்பு 07
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. T. Kalamany

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

ஆலோசகர் குழு : பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இதழ் வடிவமைப்பு : செல்வி. த.மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்

தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:

வெளியீடு : AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel 011-2506272
E-mail ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

## உள்ளே...


- பார்வையாளராக அன்றி பங்காளராக்கு.... 03
- சிறார்கல்வியும் சிறாரைக் குவியப்படுத்தும்... 08
- மாணவரின் பல் வகைமையும்... 12
- ஆசிரியரும் உட்படுத்தற் கல்வியும்... 18
- பாடசாலைக் கலாச்சாரம்... 22
- ஒரு அதிபரின் டயரி... 28
- 5ம் தர புலமைப் பரீட்சை.... 30
- அகமும் புறமும் 32
- மூதூர் அதிபர் ஆசிரியர்களுக்கான... 34
- ஒரு குளிர் நிலவுக்கு அஞ்சலி 36
- வாசகர் பக்கம் 38


அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

கடந்த இதழில் 'ஆசிரியம்' 'ஆசிரியத்துவம்' போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பிலான சிந்தனைகளை முன்வைத்தோம். சிலர் இதனைப் பாராட்டி இன்னும் இவை குறித்து சிந்திப்பதற்கான அவசியப்பாட்டை வலியுறுத்தினர்.

இதைவிட 50வது இதழையொட்டியும் மற்றும் அக்டோபர் வாசிப்பு மாதத்தையொட்டியும் ஆங்காங்கு கருத்தாடல்கள் நடைபெற்றன. குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மூதூர், அனுராதபுரம் போன்ற இடங்களில் இவை இடம் பெற்றன. இதன் மூலம் நாம் நிறைய விடயங்களை அறிந்து கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. குறிப்பாக கல்வியின் சமகாலக்கள நிலைவரம் பற்றிய தேடுகைக்கான பின்புலத்தையும் தெரிந்துகொள்ள முடிந்தது.

மூதூர் பிரதேசத்தில் சில ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்கள் பயன்பாடுடையதாக இருந்து. போர் நெருக்கடிக்குட்பட்டு இடம் பெயர்ந்து பின்னர் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வரும் நடைமுறை தற்போது உள்ளது. இந்தப் பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பது பற்றி அகவிழி சிந்திக்க வேண்டும் எனவும் சில ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டு இருந்தார்கள்.

இன்றைய 'ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம்' குறித்து நமக்கான விசேடமான பார்வைகளும் கருத்துக்களும் இடம் பெறவேண்டும். இவற்றையொட்டிய விமர்சன நோக்கு வெளிப்பட வேண்டும். பரிகாரச் செயற்பாட்டு பாங்கு இன்னும் ஆழப்படுத்தப்பட வேண்டும். இந்தப் புரிதல் அகவிழிக்கு அவசியம். இதைச் சாத்தியமாக்கும் திறனும் உழைப்பும் மற்றும் ஆய்வும் அறிவும் நமக்கு வேண்டும். இவை குறித்தெல்லாம் நாம் உணர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஒக்டோபர் மாத நிகழ்வுகள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

இதுவரை காலமுமான கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் எமது பிரத்தியேகமான வித்தியாசமான நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு செயற்படுவர்களாக இல்லை. இதனால் முரண்பாடுகளும் விலகல்களும் விரக்திகளும் தான் மிஞ்சுகின்றன. 'அரசியல் தலையீடு' மற்றும் 'அதிகாரத் துஷ்பிரயோகம்' கலாசார நடைமுறையாக கோலோச்சுகிறது.

குறிப்பிட்ட சில அதிகாரிகளின் நலன்கள் பேணப்படுவதற்கு தவறான பின்கதவு அணுகுமுறைகள் சடங்குகளாக பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக சில கல்வி வலயங்களில் பணிப்பாளர்கள் இடம் மாற்றத்துக்கு உட்பட முடியாது. அப்படி மாற்றம் வந்தால் குழுவாக சேர்ந்து தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமக்கும் மேலான அதிகாரக் கரங்களை பற்றிப் பிடித்து தம்மை நிலைநிறுத்த ஆவன செய்யும் காட்சிகள் அரங்கேறுகின்றன. சாதாரண நிலையில் உள்ள ஆசிரியர்கள் எவராலும் இவற்றைப் பின்பற்ற முடியாது. அப்படி இவற்றுக்கு தயாராகும் ஆசிரியர்களை எப்படியும் பழிவாங்க அதிகாரிகள் தயாராகிவிடுகின்றனர். 'ஆசிரியர் இடமாற்றக் கொள்கை' தொடர்பில் நடைமுறைகள் மிக மோசமாவும் சீரழிவாகவுமே உள்ளன.

'ஆசிரியர்களின் தொழில் பாதுகாப்புத் தொடர்பான நம்பிக்கையை உறுதி செய்யக் கூடியவாறான முறையில் மற்றும் சுதந்திரமான கற்பித்தல் வெளிப்பாடு, அநீதியான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக தேவையற்ற அச்சமின்றி சேவையாற்றக் கூடியவாறும் மற்றும் சேவையின் திருப்தியை உயர்ந்தபட்சம் அடையக்கூடியவாறு ஆசிரியர் இடம் மாற்றக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும்' என தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை குறிப்பிட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இந்தப் பண்புகளைக் கட்டிக் காக்கும் வகையில் ஆசிரியர் இடமாற்றம் இடம்பெறுகிறதா? இல்லை என்றே கூறலாம்.

சமகாலத்தில் தமிழ்பிரதேசங்களில் இடம்பெறும் நடவடிக்கைகளை நாம் கூர்ந்து அவதானித்தால் ஒன்று மட்டும் தெளிவாகிறது. எங்கும் 'அதிகார மேலாட்சி' தாண்டவமாடுகிறது. 'தான், தனது குடும்பம், உற்றார் உறவினர், நண்பர், ஊர்' என்ற வகிபங்குகள் சார்ந்து மட்டுமே பணிகள் மையம் கொள்கிறது.

'கல்வியின் தரவிருத்தி' 'ஆசிரியர் தரவிருத்தி' என்பதெல்லாம் இந்த அதிகார சுகத்துக்கு பின்னர் தான். அதுவும் அவை வெறும் அலங்கார வார்த்தைகள் தான். இவை மூலம் தமது சுயத்தை மறைத்து சுரண்டலும் ஒடுக்கு முறையும் செய்யும் நவீன அடிமைத்தனம் விருத்தி பெறவே இவர்கள் உழைத்து வருகிறார்கள்.

நவீன ஆசிரியர் சீர்மியராகச் செயற்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். ஆனால் வலய மாகாண மட்டத்து கல்வி நிருவாகிகளால், அதிகாரிகளால் ஆசிரியர்கள் மனநோயாளிகளாக மாற்றப்படும் அவலம் தான் தொடர்கிறது. இதற்கு பல்வேறு உதாரணங்களைக் கூறக்கொண்டே போகலாம். எவ்வாறாயினும் கல்வி நிருவாக அதிகாரிகளது 'அறிவொழுக்கம்' 'பணிநேர்மை' இன்று மீளாய்வுக்கு உட்பட்டதாகவே அமைந்து செல்கிறது.

தெ. மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ந. பார்த்திபன்
வ/தேசிய கல்விக் கல்லூரி,
வவுனியா.


**சிறார் கல்வி**

வீடுகளில்
பெற்றோர்களும் சரி,
பாடசாலைகளில்
ஆசிரியர்களும் சரி
சிறுவர்களைப்
'பங்கு கொள்ளச் செய்தல்'
என்பதை விரும்பவில்லை.
மாறாக சிறுவர்கள்
எடுக்க வேண்டிய
தீர்மானங்களைத்
தாங்களே
எடுத்துக்கொள்கின்றார்கள்.

# பார்வையாளராக அன்றி பங்காளராக்குவோம்

சர்வதேச சிறுவர் தினத்தில் பங்கு கொள்ளல் தொடர்பான சிறுவர் உரிமை என்ற எண்ணக்கரு தொடர்பாக பெரியோர்கள் நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. ஆயினும் இன்றுவரை வளர்ந்து வரும் நாடுகளில் இத்தீர்மானங்கள் பெரியோர்களால் எடுக்கப்பட்டதா? என்ற கேள்வி பதில் இல்லாத கேள்வியாகவே காணப்படுகின்றது. வீடுகளில் பெற்றோர்களும் சரி, பாடசாலைகளில் ஆசிரியர்களும் சரி சிறுவர்களைப் 'பங்கு கொள்ளச் செய்தல்' என்பதை விரும்பவில்லை. மாறாக சிறுவர்கள் எடுக்க வேண்டிய தீர்மானங்களைத் தாங்களே எடுத்துக்கொள்கின்றார்கள். இதன் தாக்கத்தையும் புரிந்து கொள்வதில்லை. குழந்தைகளின் சார்பாக ஒரு குழந்தையின் கோரிக்கை பின்வருமாறு கூறப்படுகின்றது.

நான் நீயல்ல
ஆனால்
நான் நானாக இருப்பதற்கு
நீ
ஒரு சந்தர்ப்பம் தருகிறாயில்லை
நீ என் விஷயங்களில்
தலையிடுகிறாய்
ஏதோ அவை
உன் விஷயங்கள் போலவும்
நீ நான் போலவும்
"நான் நீயாக இருந்தால்...."
உனக்குத் தெரியும்
நான் நீயல்ல
என்றாலும்
நீ என்னை நானாக இருக்க
விடுகிறாயில்லை;
நான் நீயாகலாம்
உன்னைப் போல்
பேசலாம், நடக்கலாம்
சிந்திக்கலாம்
என எண்ணும்
உனக்குப் புத்தியில்லை
உன்பக்கம் நியாயமில்லை;
கடவுள் என்னை நானாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உன்னை நீயாகவும்*
*படைத்தார்*
*கடவுள் பேரால் கேட்கிறேன்*
*என்னை*
*நானாக இருக்கவிடு!*

மேலே உள்ள கவிதை ஆர்.ரி.டெம்ஸ்ரர் ஆபிரிக்காவின் கோரிக்கை என்ற தலைப்பில் ஆங்கில மொழி மூலம் வெளிவந்து இதனை ஒரு குழந்தையின் கோரிக்கை எனத் தமிழில் சோ.பத்மநாதன் மொழி பெயர்ந்திருந்தார்.

மேற்கூறிய கவிதையின் உணர்வுகள் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மனதில் உறைக்க வேண்டும். பாடசாலையில் வேலைத் திட்டங்களைத் தயாரிக்கையில் பிள்ளைகளின் கருத்துக்களையும் பெற்று தீர்மானம் எடுக்க வேண்டும். அவ்வாறு தீர்மானம் எடுத்தால் தான் அது மாணவர்களையும் பங்கு கொள்ளச் செய்யும். பாடசாலைச் செயற்பாடுகளில் மகிழ்ச்சியாகச் செயற்பட வைக்கும். வீட்டினிலும் பெற்றோர்கள் பிள்ளைகளை கவனத்தில் கொண்டு அவர்களது விருப்பங்கள், தேவைகள், கருத்துக்கள் என்பனவற்றுக்கேற்ப தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

எமது பிள்ளைப் பருவத்தைக் கவர்ந்து விடாதீர்கள் என்று பிள்ளைகள் மனதுக்குள் அழும் அழுகையொலி உங்களுக்குக் கேட்கிறதா? படிக்காததோரும் சரி, படித்தவர்களும் சரி, வசதி படைத்தோரும் சரி, வசதி இல்லாதோரும் சரி பிள்ளைகளின் மன நிலையைப் பற்றிச் சிந்திப்பதில்லை. சிலருக்கு அதற்கான மனப்பக்குவம் இல்லை. இன்னும் சிலருக்கு நேரமில்லை. இதுபெற்றோர்களின் நிலை என்றால் ஆசிரியர்களுக்கு வேறொரு கோணத்தில் இக்குறைபாடு உண்டு. மொத்தத்தில் பிள்ளைகளின் இளமைப் பருவம் மகிழ்ச்சியற்றதாகக் காணப்படுகிறது என்பது உண்மையானது. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமலும், புரிந்தாலும் எங்களால் என்ன செய்ய முடியும் என்ற நிலையில் பெரியோர்கள்.

கீழுள்ள கவிதை ஆசிரியர்களுக்கு கூறும் அறிவுரையாக அமைந்திருக்கிறது.

### பொய்கள்

*சிறுவர்களிடம் பொய்க் கதைகள்*
*சொல்லாதீர்கள்! தவறு.*
*பொய்யை உண்மையென்று*
*நிருபிப்பது அதைவிடத் தவறு.*
*வானில் சொர்க்கத்தில்*
*கடவுள் இருக்கிறார் என்னும்*
*உலகெல்லாம் இன்பத்தில் மிதக்கிறது*
*என்றும் கூறாதீர்கள்.*
*நீங்கள் சொல்வதை அவர்கள்*
*புரிந்து கொள்வார்கள்!*
*அவர்களே வருங்கால மக்கள்.*
*எண்ணற்ற நம் துன்பங்களை*
*அவர்களுக்கு உரையுங்கள்!*
*வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்*
*என்பது மட்டுமல்லாமல் - அது*
*தற்போது எப்படி இருக்கிறது*
*என்பதையும் பார்க்கட்டும்.*
*தடைகள் இருக்கின்றன*
*தகர்க்கச் சொல்லுங்கள்!*
*துயரங்களும் துன்பங்களும்*
*தோன்றக் கூடும்*
*அழிக்கச் சொல்லுங்கள்*
*இன்பத்தின் விலையை அறிய முடியாதவர்கள்*
*இன்புறவே இயலாது!*
*தவறு என்று கண்டதை*
*மன்னிக்காதீர்கள் - ஏனெனில்*
*அவைகள் திரும்பவும்*
*நேர்ந்து அதிகமாகக் கூடும் - பின்*
*நமது மாணவர்கள்*
*நாம் மன்னித்தற்காக*
*நம்மை மன்னிக்க மாட்டார்கள்!*

இக்கவிதை பொங்கனி யெவ்டுஷென்கோ என்ற ரஷ்யக் கவிஞரால் எழுதப்பட்டது. ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய, சொல்லிக்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி எடுத்துரைக்கின்றது.

பிள்ளைகளைக் கற்பனையுலகில் பறக்க விடுதலை விட நிஜ வாழ்க்கையில் திளைக்க விட வேண்டும். அவர்களே உணர்ந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் அனுபவத்தினூடாகக் கற்க வேண்டும்.

எமது கல்விப் போக்கு இன்னமும் பரீட்சை நோக்கில் தான் தீவிரமான கவனஞ் செலுத்துகிறது. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த(சா.த), (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில்தான் மாணவர்களின் கெட்டித்தனமும் பாடசாலைகளின் சிறப்பும் அளவிடப்படுகிறது. இக் குறிகாட்டிகளில் உயர்வைக் காட்டுவதற்காக மாணவர்கள் வதைக்கப்படுகிறார்கள். அவர்களது சந்தோஷங்கள், இளமைக் காலங்கள் சிதைக்கப்படுகின்றன. இந்நிலையில் பிள்ளைகளைத் தீர்மானம் எடுக்க விடுவது என்பது நிறைவேறுமா?

பிள்ளைகளின் பாடசாலைத் தெரிவு, பாடநெறித் தெரிவு, பாடத்தெரிவு எல்லாம் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் தான் இன்னமும் தீர்மானிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே பாடசாலை வாழ்க்கையும் படிப்புச் செயற்பாடும் சுமையாகப் பிள்ளைகளால் உணரப்படுகிறது. பாடசாலைக் காலங்களில் சகபாடிகளுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவதால் பள்ளிக்காலங்கள் ஓரளவு சந்தோஷமானதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் பரீட்சைக் காலங்களும் பெறுபேறு கிடைக்கும் காலங்களும் துன்பமானதாய்க் கழி-கின்றது.

மனனம் பண்ணும் கற்றல் முறையும், விளக்கமின்றிக் கற்று நினைவுபடுத்தப் பெரும் பிரயத்தனம் செய்யும் நிலையும், பரீட்சை முடிய மறந்துவிடும் நிலையும், கல்விக்கென செலவழித்த பணமும், காலமும், உழைப்பும் மிகக்குறுகிய காலத்தில் மறந்து போவ-தால் ஏற்படுகின்ற சலிப்பும் என மாணப்பருவம் துன்பம் நிறைந்ததாய் பலருக்கு அமைந்துவிடுகின்றது.

படிப்பு வாழ்க்கை எப்போது முற்றுப் பெறும், பரீட்சைகள் எப்போது முடிவடையும், இதற்கொரு எல்லையில்லையா? இருக்கின்ற கோட்பாடுகள், கொள்கைகள், தத்துவங்கள் எவ்வாறு நினைவி-லிருத்திக் கொள்வது - போன்ற சலிப்புடனான மனப்பாங்கை ஏற்படுத்தும் கேள்விகளை உருவாக்கிக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கல்வியா? என்ற நினைப்புகளும் சேர்ந்து கல்வி கற்றலுக்கு மகிழ்ச்-சிக்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்புதான் நிலவுகின்றது என்ற அபிப்பிராயமே காணப்-படுகின்றது. இந்நிலையில் மகிழச்சிகரமான கற்றல் என்பது வெறும் வாய்ச்சொல்லாகவே அமைந்துள்-ளது எனலாம்.

இந்நிலையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களிற்கு மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பின்வரும் விடயங்களை ஏனைய மாணவர்களுக்கும் ஏனைய பாடங்களுக்கும் பொது-மையானதாகக் கொள்ளலாம் என நம்பமுடியும்.

- ♣ ஒவ்வொரு தனியாளும் தனித்துவமானவர்: தனித்துவ ஆற்றல்களை உடையவர். ஒரு பிள்ளையின் மொழியாற்றலைச் செம்மையாகக் கண்டறியவோ அது பற்றிய பயனுள்ள வரைவிலக்கணம் கூறு-வதற்கோ பரீட்சைகளும் (மதிப்பீடு) கணிப்-பீடுகளும் போதுமானவையல்ல.
- ♣ பிள்ளைகள் வெவ்வேறு விகிதத்தில் மொழி விருத்தியைப் பெறுவர். ஆனால் விரைவாகவோ மெதுவாகவோ மொழியாற்றலை விருத்தி செய்யும் பிள்ளைகள் கட்டாயமாக அதே விகிதத்தில் தான்-தொடர்ந்தும் அம்மொழியாற்றலைப் பெறுவர் எனக் கருதுவதற்கு எவ்வித காரணமும் இல்லை.
- ♣ பாடசாலையிலே பொருத்தமான ஆதரவும் உற்சாகமும் வழங்கப்பட்டால் சகல பிள்ளை-களும் (உடலியற் குறைபாடு காரணமாக வளர்ச்சி குன்றினால் ஒழிய) தமது சகபாடிகளின் நிலையை அடையலாம் அல்லது அதற்கு அப்பாலும் செல்லலாம். சகல பிள்ளைகளையும் உற்சாகப்-படுத்தி ஆதரவு கொடுப்பதில் ஆசிரியர் மேற்-கொள்ளும் பிரயத்தனங்களிலேயே மொழி விருத்தியில் பிள்ளை பெறும் விருத்தி தங்கியுள்ளது என்பதே இதன் அர்த்தமாகும்.
- ♣ பிள்ளைகளுக்கு இடையிலான வேறுபாடுகளுடன் அவர்கள் வாழும் சூழல் வேறுபாடுகளுடனும் பிள்ளை விருத்தி தொடர்புடையது. பிள்ளைகளின் மொழி விருத்தியிலே முக்கியமானதொரு காரணி யாதெனில் பிள்ளைகள் இளம் வயதில் பங்கேற்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்கள் உரையாடும் அளவைப் பொறுத்ததாகும்.
- ♣ பிள்ளையின் விருத்தியிலே சூழல் பங்கு வகிக்கின்ற போதிலும் மொழி விருத்தியைப் பொறுத்த வரை-யிலே பிள்ளை சார்ந்துள்ள வர்க்கமோ பொருளா-தார நிலையோ பங்கு வகிப்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. ஆயினும் குடும்பத்தில் பிள்ளை-யின் இடமும் சகோதரர்களின் எண்ணிக்கையும் அதன் மொழி விருத்தியில் செல்வாக்குச் செலுத்-தத்தான் செய்கின்றன.

**மனனம் பண்ணும் கற்றல் முறையும், விளக்கமின்றிக் கற்று நினைவுபடுத்தப் பெரும் பிரயத்தனம் செய்யும் நிலையும், பரீசை முடிய மறந்துவிடும் நிலையும், கல்விக்கென செலவழித்த பணமும், காலமும், உழைப்பும் மிகக்குறுகிய காலத்தில் மறந்து போவதால்**

- ♣ பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி முன்னேற்-றத்தைக் காட்டும் பலம் வாய்ந்த அறிகுறிகளாக அவர்களின் வாசிக்கும் திறனும் எழுதுந்திறனுமே விளங்குகின்றன; பாடசாலைக்கு வருவதற்கு முன்-னர் அவர்கள் பெற்ற மொழி அனுபவங்கள் அல்ல. காரணம் பிள்ளைகள் வாசகர்களாகவும் எழுத்-தாளர்களாகவும் வருவதற்கு உதவும்போது அவர்-களின் பேச்சு மொழியாற்றலை ஆசிரியர்கள் பயன்படுத்தாமையே ஆகும்.
- ♣ தொடக்கத்தில் மொழியிலே கூடுதலான தேர்ச்சி பெற்றவர்களைவிடக் குறைந்த தேர்ச்சி பெற்ற-வர்கள் தேவையான ஆதரவும் ஊக்கமும் வழங்-கப்பட்டால் விரைவில் அதிகளவு முன்னேற்றம் காணக்கூடியவர்கள் ஆகிவிடுவர். இந்த வகையில் பிள்ளைகளைத் தனித்தனியாகப் பார்த்து, அவர்-களுக்கு வேண்டிய உற்சாகத்தையும் ஆதரவையும் வழங்குவதே ஆசிரியரின் பணியாகும்.

மேற்கூறிய கருத்துக்கள் கோல்டன் வெல்ஸ் என்பவ-ரால் ஆய்வு ரீதியாக எடுத்துக் கூறப்பட்டவையாகும். இவை பிள்ளைகள் மொழியறிவைப் பெற்றுக்-கொள்வது தொடர்பாகவும் மொழிக்கற்றலுக்கு - கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு அதனைப் பயன்படுத்தலாம் என்பதனையும் எடுத்து விளக்கு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. எனினும் மாணவர்களின் கற்றல் தொடர்பாக ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலை சிறந்த முறையில் ஆற்றுவதற்கும் இவை துணை புரிகின்றன எனக் கூறலாம்.

முடிவாக பிள்ளைகளை மகிழ்ச்சிகரமானதாக கற்றல் நிகழ்வை அனுபவிக்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் உதவிபுரிய வேண்டும். பாடசாலைக்கு வெளியேயும் கற்றல் நிகழ்வதால் அறிவைப் பெற்றுக் கொள்ள பாடசாலை தான் ஒரே இடம் என்றும் பரீட்சைகள் தான் ஒரே வழி என்றும் பெரியோர்கள் நினைப்பதால் கற்றல் மகிழ்ச்சியற்றதாக பிள்ளைகளுக்குக் காணப்படுகிறது. மேலும் வாழ்க்கைக்கு பொருத்தமில்லாத கல்வியும், பரீட்சையும், பெறுபேறுகளும் வெறும் கடதாசித் தராதரங்களாலும் பட்டம், பதவி, உழைப்பு, கௌரவம், வசதியான வாழ்க்கை பெற கருவிகளாகவும் கணிக்கப்படுவதால் இந்த வட்டத்துக்கு வெளியே செல்லும் பிள்ளைகள் வாழ்க்கையைத் தொலைத்து விட்டவர்களாகவும், சமூகத்தில் தோல்வி அடைந்தவர்களாகவும் நினைக்கும் நிலை தோன்றுகின்றது. இந்நிலையில் பெற்றோரினதும் ஆசிரியரினதும் அவாவுக்குத் தாம் பலியிடப்படுவதாக அநேக மாணவர்கள் உணர்கிறார்கள். இது படிப்பை சுமையாக்குவதாக அவர்களை நிலைக்கச் செய்கிறது. இந்நிலை மாற வேண்டும். பிள்ளைகள் விருப்பத்துடன் கல்வி கற்று மகிழ்ச்சியுடன் கல்வி வாழ்க்கையைத் தொடர வேண்டும்.

புத்தகப் பூச்சிகளாக பிள்ளைகள் கருதப்படுகிறார்கள். ஆண்டு இண்டுப் பிள்ளை 3 அதிகாரங்கள்; 30 பாடல்களைத் திருக்குறளில் மனனஞ் செய்து ஒப்பிக்கத் தூண்டப்படுகின்றான். பெற்றோரின் கௌரவத்திற்காகப் பிள்ளை வதைக்கப்படுகிறான். குருவியின் தலையில் பனம்பழத்தை வைப்பது போல அர்த்தமில்லாத கல்விச் சுமையை சுமக்கிறார்கள். பாடசாலை விடும் மணி அடித்ததும் பிள்ளைகள் போடும் கூச்சல் தான் உண்மையான ஆரவாரம். மகிழ்ச்சியான பாடசாலை, சந்தோஷமான வகுப்பறை, தண்டனை வழங்காத ஆசிரியர்கள் எல்லாம் கேள்விக்குறியாகப் போய்விட்ட நிலையில் வீடும், பெற்றோரும் பாடசாலையை நோக்கி அனுப்பும் செயற்பாடு பற்றிய இளமுருகு எழுதிய கவிதையைப் படியுங்கள். "சிருஷ்டி நகரம்" என இதற்குத் தலைப்பிட்டுள்ளார்.

*ஒரு சொட்டுக் கண்ணீரேனும் சிந்தாமல்*
*ஒரு நாளும் பள்ளிக்குப் போவதில்லை*
*என் மகன்.*
*புகார்கள் நிரம்பித் ததும்பும் பையுடன்*
*மாலையில் வந்து சேர்வான்*
*பையை அவன் திறக்காமல் இருக்க வேண்டும்*
*என்பதே என் அன்றாடக் கவலை.*
*நடக்கும் தூரத்திலுள்ள*
*பள்ளி ஒன்றில் சேர்த்துவிட்டேன்*
*செல்ல அரை நாளும்*
*திரும்ப அரை நாளும் எடுத்துக் கொண்டான்.*
*வாகனத்தில் கொண்டு விடும் தூரமுள்ள*
*பள்ளிக்கு அனுப்பினேன்*
*வாகனம் பழுதாக வேண்டும் எனவும்*
*வாகனத் திருடன் விரைவில் வரவேண்டும் எனவும்*
*அவனுடைய கடவுள்களிடம் வேண்டுதல் செய்தான்.*
*பேருந்தில் செல்லும் தொலைவிலுள்ள*
*பள்ளி ஒன்றைக் காட்டினேன்*
*உயர்ந்த கட்டிடங்கள் அண்ணாந்து பார்த்து*
*'பொக்ளின் வந்தால்*
*ஒரு மணி நேரத்தில் இடித்து விடுமோ என்று கேட்டான்.*
*அவனுக்கான பள்ளியை*
*எப்படிச் சிருஷ்டிப்பதெனயோசித்துக்கொண்டிருந்த நாளில்*
*வீட்டிற்குள் அவனோர்*
*அற்புத நகரம் உருவாக்கியிருந்ததைக் கண்டேன்.*
*கண் விரியப் பார்த்த என்னை*
*நகரத்துக்குள் அழைத்துச் சென்றான்*
*கூரிய கட்டிடங்கள்*
*மிதக்கும் சாலைகள்*
*விளையாட்டுத் திடல்கள்*
*எல்லாம் சுற்றி முடித்த நான்*
*எங்கே உன் பள்ளிக்கூடம் என்றேன்.*
*வினோதமாக என்னைப் பார்த்த அவன்*
*முகம் சுருங்கி*
*இது பள்ளியில்லா நகரம் என்றான்.*

ஏன், எதற்காக, எப்படி.... என எத்தனையோ கேள்விகளைக் கேட்டு தான் வாழும் உலகத்தைப் புரிந்து கொள்ளும் ஆவலோடு (பெரியவர்களுக்கு இது நச்சரிப்பது போலிருக்கும்) தன்னுடன் நெருங்கிப் பழகும் பெரியோரைப் பார்த்துக் கேட்கும் பிள்ளைகளை, கவிஞர் வைரமுத்து கூறியது போல "கடப்பாரைகளாக பாடசாலைக்கு அனுப்பிய பிள்ளைகளை குண்டுசிகளாகத் திருப்பி அனுப்பும் நிலையில்" பிள்ளைகளது பொங்கி வரும் ஆர்வம் அடக்கப்படுகிறது. திருவிளையாடல் தருமி கூறுவது போல் 'கேள்விக்கு நான் பதிலுக்கு நீ என்பது போல் ஆசிரியர்கள் கேள்வி மட்டும் கேட்பவர்களாக, ஆரம்பப் பிரிவு மாணவர்களென்றால் வாயில கை வை (வாயைப பொத்து என்பது நாகரிகமாகக் கூறல்) என்று சொல்லிச் சொல்லியே ஐந்தில் வளைத்ததனால் பத்திலும் பதினைந்திலும் கூட பிள்ளைகள் கேள்வி கேட்பதில்லை. எங்கள் கல்வி முறையின் தாற்பரியம் பிள்ளைகளை ஊமைகளாக்கி, மீறினால் தண்டனைக்குள்ளாக்கி வேதனை கொள்ளச் செய்கிறது.

*குழந்தைகள்*
*தொடர்ந்து குற்றம் புரிகிறார்கள்*
*குழந்தைகளைத் தண்டிக்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய முறைகள் ஏராளம் உண்டு
செவிடாகும்படி கத்தலாம்
தடிகொண்டு அடிக்கலாம்
காதைப் பிடித்துத் திருகித் தூக்கலாம்
இழுத்து வெளியே எறியலாம்
வாத்திகளிடம் சொல்வேன் என மிரட்டலாம்
சொல்லியும் வைக்கலாம்.
வழியில் போகும் யாரையேனும் அழைத்துப்
பயமுறுத்தச் சொல்லலாம்
பொம்மைகள் ஒழிக்கலாம்
கதைகளை நீதி சொல்லி முடிக்கலாம்
வீட்டுப்பாடம் செய்ய வற்புறுத்தலாம்
வரைந்த ஓவியத்தைக் கிறுக்கல் என்று சொல்லிப்
பிடுங்கிக் கிழிக்கலாம்.
எனினும்
இன்னும் நாம்
தண்டனைகளை வலுவாக்க வேண்டும்
நம் புறப்பாட்டின் அவசரத்தைப்
புரிந்து கொள்ள முடிகிறதா அவற்றால்
தொலைபேசி அழைப்பொன்று
கிடைக்காத பதற்றத்தை
உணர முடிகிறதா அவற்றால்
பொது இடங்களில் நாகரிகமாக
நடந்து கொள்ளத் தெரிகிறதா அவற்றுக்கு
நிம்மதியாகச் சிறுபயணம் போக முடிகிறதா நம்மால
ஆழ்ந்த விவாதங்களினூடே
ஓடிவந்து முதுகேறி உரசி
அவை செய்யும் இடைஞ்சல்கள் எத்தனை
குழந்தைகளின் குற்றங்கள்
பெருகிக் கொண்டேயிருக்கின்றன.

குழந்தைகளைக் குழந்தைகளாய்ப் பார்க்காது, அவர்களின் குழந்தைமையை உணராது, அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்தலாம், அதற்கு என்னென்ன தண்டனைகளைக் கொடுக்கலாம் என வயதுவந்தோர் சிந்திப்பதும் செயற்படுவதும் அவர்களுக்கு பெரியோர்கள் மேல் வெறுப்பைக் கொடுக்கிறது. என்னை நானாக இருக்க விடுங்கள் என்று குழந்தைகள் கேட்பது பலருக்குப் புரியவில்லை. குழந்தைகள் வளர்ந்தோரின் சிறிய உருவங்கள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது சிந்தனைகள் செயற்பாடுகளுக்கு இடங்கொடுக்க அவர்களைக் குழந்தைகளாகவே பார்க்கும் பக்குவத்தைப் பெரியோர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவர்களைப் பார்வையாளர்களாக அல்லது பங்காளராக மாற்ற முடியும். அதன் பலன்களை நாமும் மட்டுமல்ல அவர்களும் பெறமுடியும்.

சிறார்க்கான கற்பித்தலில் 'அன்பு' என்ற விழுமியம் ஊடுருவியிருத்தல் வேண்டும் என புலவர் வலியுறுத்தினார். தாம் கற்பித்த பாடசாலையை கலையரசியாக உருவகம் செய்து 'கலையரசி ஐம்பருவம்' என்ற நடிப்புப் பாடசாலை உருவாக்கிய புலவர் அவர்கள் அம்புலிப் பருவத்தில் அன்பின் ஆழத்தை வலியுறுத்துகின்றார்.

"அன்னைமார்கள் தந்தைமார்கள் வெண்ணிலாவே - இங்கு
அன்புடையோர் வந்து விட்டார் வெண்ணிலாவே"

என்று அந்த அடிகள் வருகின்றன. "ஆடு கதறியது" என்ற பாடலில் ஆடு என்பதைக் குறியீட்டாக வைத்து அன்பின் வடிவங்களை விளக்குகின்றார். நட்பின் பெருமை, ஈதல், அறம், கொல்லாமை முதலாம் விழுமியங்கள் அன்புடன் தொடர்புபட்டு நிற்றல் புலவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


மோமசுந்தரப்புலவர் அவர்களது சிறார் கல்விச் சிந்தனைகள் இயற்பண்புநெறி தழுவி மலர்ச்சியடைத் தொடங்கின.

சிறார்க்கான கற்பித்தலில் குழவிப் பாடல்களின் முக்கியத்துவம் மோமசுந்தரப் புலவரினால் வலியுறுத்தப்பட்டது. தமிழிலே காணப்படும் இனிய ஓசையின் அமைதி 'வண்ணம்' என்று அழைக்கப்படும். செவிக்கு இன்பம் தரும் வண்ணங்களைப் பயன்படுத்தி சிறார்க்கு முறைசார்ந்த வகையிலும் முறைசாரா வகையிலும் கற்பித்தல் வேண்டுமென்பது புலவரது கருத்தாக அமைந்தது. வண்ணங்களைக் கேட்கும் பொழுது செவிப்புலன் தழுவிய அறிகையும் எண்ணக்கருவாக்கமும் வளர்ச்சியடைந்து மேம்பாடு கொள்ளும்.

(நன்றி: முனைவர். சபா.ஜெயராசா, 'குழந்தை உளவியலும் கல்வியும்' பக்-126-127)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சபா.ஜெயராசா,
முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சிறார் கல்வி

பருமட்டாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூவாயிரம் ஆண்டளவில் நியமமான கல்விச் செயற்பாடுகள் தொன்மையான நாகரிகங்களிலே தோற்றம் பெறலாயின.

# சிறார்கல்வியும் சிறாரைக் குவியப்படுத்தும் இலக்கியங்களும்

அறிவையும் அனுபங்களையும் கையளிப்புச் செய்யும் கல்விச் செயல்முறையிலே சிறாரைக் குவியப்படுத்தி நிற்றல் மனித வரலாற்றிலே பலநிலைகளில் இடம் பெற்று வரும் நிகழ்காட்சிகளாகும். தொன்மையான கூட்டுவாழ்க்கையிலே இடம் பெற்ற சிறார்க்கான கல்வியானது, குலக்குழுவைப்பலப்படுத்தும் அறிவுக் கையளிப்போடும், சூழலுடன் நிகழ்த்தப்பட்ட போராட்ட அனுபங்களை வயது நிலைக் கேற்றவாறு கையளித்தலோடும், பொருத்தப்பாடு கொண்டு வாழ்வதற்குரிய அறிவை வழங்குதலோடும் தொடர்புபட்டு நின்றது. ஒத்துணர்வு பொருள் இனங்காணல் எண்ணக்கருவாக்கம், பாவனை செய்தல், முதலிய அறிகைப் பண்புகள் தொன்மையான சிறுவர் கல்வியிலே சிறப்பிடம் பெற்றிருந்ததாக மானிடவியலாளர் குறிப்பிட்டுள்ளனர். "பார்த்தலும் செய்தலும்" அக்காலத்துச் சிறார்க்கல்வியிலே மேலோங்கிய பண்பாகக் கருதப்பட்டது. குலக்குழுவின் உறுப்பினராக முகிழ்த்தெழுவதற்குரிய அடிப்படைகளைக் கையளித்தல் தொன்மையான சிறார் கல்வியின் சிற்பியல்பு ஆயிற்று.

பருமட்டாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூவாயிரம் ஆண்டளவில் நியமமான கல்விச் செயற்பாடுகள் தொன்மையான நாகரிகங்களிலே தோற்றம் பெறலாயின. அவற்றோடிணைந்ததாக சிறார்கல்வியை வரன் முறைப்படுத்தும் செயற்பாடுகள் வளர்ச்சி பெறத் தொடங்கின.

சிறுவர்க்கான நூல்கள் வெளிவருவதற்கு முன்னதாகவே சிறுவரைக் குவியப்படுத்தும் வாய் மொழி இலக்கியங்கள் தோற்றம் பெற்றுவிட்டன. நாளாந்த அனுபவங்களைத் தளமாகக் கொண்டு மேலெழுந்த புனைவுகள், மாயவித்தைகள், சடங்குகள், முதலியவற்றை அடியொற்றிய கதைகள், தேவதைக் கதைகள், புத்தி பூர்வமாக நடந்து கொள்வதனாற் கிடைக்கப் பெறும் அனுகூலங்கள், அறியாமையாயின் அவலங்கள் கூட்டுவாழ்வின் பலம் முதலியவை சிறுவர்க்கான வாய்மொழி இலக்கியங்களின் உள்ளடக்க வீச்சுக்களாக இடம் பெற்றன.

சிறுவர்க்கு மட்டுமுரிய தனித்துவமான நூலாக்கம் கி.பி ஏழாம் நூற்றாண்டளவிலே தோற்றம் பெற்றது. அல்கெம் (Aldhelm) என்ற ஆங்கில அறிஞர் இலத்தின் மொழியில் அந்த நூலாக்கத்தை மேற்கொண்டார். ஆசிரியருக்கும் மாண-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்குமிடையே நிகழும் எளிமையான உரையாடல்கள், செய்யுள் வடிவிலமைந்த நொடிகள், கிறிஸ்தவ சமயப்பனுவலில் ஏழாம் இலக்கத்தின் முக்கியத்துவம், யாப்புப் பற்றிய அறிமுகம் முதலிய-வை அந்த நூலிலே இடம் பெற்றன.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட கால வளர்ச்சியில் திருச்சபைகள் வரன் முறையான கல்விச் செயற்பாடுகளிலே நேரடியாக ஈடுபடத் தொடங்கியதுடன், சிறார்க்குரிய நூலாக்கங்களிலும் விருப்புக் காட்டலாயினர். கற்கும் பாடங்களோடு இணைந்த சிறுவர்க்கான எழுத்தாக்கங்கள் ஒருபுறமும் பாடங்கள் சாராத மகிழ்ச்சியூட்டும் இலக்கியப் புனைவுகள் மறுபுறமும் என்ற இருநிலை வளர்ச்சி மேலாங்கத் தொடங்கின.

கற்கும் பாடங்கள் சாராத மகிழ்வூட்டும் புனைவுகளில் "விலங்கமைவுகள்" (Bestiaries) சிறப்பிடம் பெற்றிருந்தன. நிலையான சமூக வாழ்க்கையோடு தொடர்புடையதாக வளர்ப்பு விலங்குகள் குடும்பங்களோடு இணைந்திருந்தமையும், சிறார் அவற்றோடு கொள்ளும் இடையுறவுகள் மேலாங்கியிருந்தமையும் விலங்கமைவுகளைத் தூண்டிய சூழற்காரணியாயின. இடைக்காலங்களின் சிறார் கலைத்திட்டங்களில் சூழல் அனுபவங்கள் இடம் பெறத் தொடங்கியமையும் சமாந்தரமான கல்வி நிகழ்ச்சியாயிற்று.

கி.பி பதின்னான்காம் நூற்றாண்டைத் தொடர்ந்து ஐரோப்பிய கல்வி மொழியில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அதாவது, லத்தீன் மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகள் கற்பித்தல் மொழிகளாக வளர்ச்சியடையத் தொடங்கின. இந்நிகழ்ச்சியையைத் தொடர்ந்து சிறார் இலக்கியங்கள் மேலும் வளர்ச்சி பெறத் தொடங்கின. பல நாடுகளை உள்ளடக்கிய வர்த்தக வளர்ச்சி கி.பி பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் ஏழுச்சி பெறத் தொடங்கியமை சிறார் இலக்கியங்களில் இரண்டு விதமான செல்வாக்குகளை ஏற்படுத்தலாயிற்று அவை வருமாறு:

1. வேற்றுப்பண்பாடுகளின் தொடர்புகள், நகரங்களின் வளர்ச்சிச் சமூக அசைவியம் முதலிய தாக்கங்களுக்கிடையே சிறாரின் நடத்தைகளை ஒழுங்கமைக்கும் பொருட்டு நல்ல பழக்கவழக்கங்கள், நல்லொழுக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் பாடல்களும் நீதிக்கதைகளும் புனையப்படலாயின.

2. பல்வேறு நாடுகளுக்குமிடையே வளர்ச்சிபெறத் தொடங்கிய தொடர்புகளால் ஒரு புலத்துச் சிறார் இலக்கியங்களை இன்னொரு புலத்தில் வாழ்வோர் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் மேலும் விரிவாக்கம் பெறலாயின. 1484 ஆம் ஆண்டில் வில்லியம் கஸ்ரன் என்பவர் ஈசாப் கதைகளை ஆங்கில மொழி பெயர்ப்புச் செய்து நூலாக வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

கற்பித்தலில் எழுத்து வடிவக்கற்பித்தல், எண்வடிவக்கற்பித்தல், வாய்மொழி மற்றும் மனனம் என்ற செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. சிறாரைக் குவியப்படுத்திய உளவியலின் படிப்படியான வளர்ச்சி பதினேழாம் நூற்றாண்டைத் தொடர்ந்து மேலெழலாயிற்று. சிறார்க்குரிய நூலாக்கங்களிலும் கற்பித்தலிலும் "படங்கள்" முக்கியத்துவம் பெறத்தொடங்கின. எழுத்து வடிவ இயம்பலைக் காட்டிலும், படவடிவப் புனைவுகள் மேலோங்கத் தொடங்கின. அக்காலத்தைய கல்வியில் இச் செயற்பாடு "Orbis Pictus" என அழைக்கப்பட்டது. இதன் பொருள் "படங்கள் தழுவிய உலகம்" என்பதாகும். கல்வியில் இந்த முயற்சியின் முன்னோடியாக கொமினியஸ் (1592-1670) விளங்குகின்றார். தாம் எழுதிய நூலின் முன்னுரையில் அவர்

**கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட கால வளர்ச்சியில் திருச்சபைகள் வரன் முறையான கல்விச் செயற்பாடுகளிலே நேரடியாக ஈடுபடத் தொடங்கியதுடன், சிறார்க்குரிய நூலாக்கங்களிலும் விருப்புக் காட்டலாயினர்.**

பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஞானத்தின் கவின் காவிலிருந்த சிறுவரைப்பயமுறுத்தும் வெருளிகள் அப்புறப்படுத்தப்படுகின்றன."

ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் இடம் பெற்ற அவரதுபடைப்புக்கள் பின்னர் ஆங்கிலம் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்படலாயின. கொமினியஸ் அவர்களின் சிந்தனைகளும் சிறார்கல்விச் செயற்பாடுகளும் கிறிஸ்தவ சமயப் பரவலின் வழியாக உலகெங்கும் எடுத்துச் செல்லப்படலாயின.

பதினேழாம் நூற்றாண்டைத் தொடர்ந்து "வலு நூல்கள்" (Horn Books) ஐரோப்பாவில் வெளிவரத் தொடங்கின. சிறார் பயன்படுத்தத்தக்கவகையில் அவை உறுதிக்கட்டமைப்புடன், உருவாக்கப்பட்டன. அதாவது, மலிவு விலையும் நீடித்த ஆயுளும் கொண்ட அமைப்பு அங்கே இடம் பெற்றது. அச்சடிக்கப்பட்டதாள்கள் மெல்லிய மரப்பலகைகளிலே ஒட்டப்பட்டு கண்ணாடித் தாள்களால் சுற்றப்பட்ட வெளியீடுகளாக வலுநூல்கள் அமைந்திருந்தன.

பள்ளிக்கூடங்களிலே பயன்பாட்டுக்கு உட்படத் தொடங்கிய பாடநூலை "முதன்மையம்" (Primer) என்ற தொடரில் பெஞ்சமின் கரிஸ் (1673-1713) வெளியிடலானார். அந்நூலின் முக்கியத்துவம் சிறார் சந்தப்பாடல்கள் (Rhymes) வழியாக எண், எழுத்து, ஒழுக்கம், இறை நம்பிக்கை முதலியவற்றைக் கற்பித்தல் என்பதை அடியொற்றியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளை வளர்ந்தோருக்குரிய நூல்களைச் சிறார்கற்க வேண்டும் என்ற துன்புறுத்தல்களும் சமாந்தரமாக நிகழ்ந்துவந்தன.

சிறார் மீது மேற்கொள்ளப்பட்ட திணிப்பையும், அடக்கு முறைகளையும் தகர்க்கும் முகமாகத் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவமாகத் "தேவதைக்கதைகள்" எழுச்சி கொள்ளத் தொடங்கின. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சார்லஸ் பெறாலுத் (1628-1703) இத்துறையிலே பெரும் வழங்கலைச் செய்யலானார். சின்டிறனெல்லா, நித்திரை அழகு, முதலிய தேவதைக் கதைகள் உலகம் முழுவதும் பரவலாயின.

சிறுவர் கல்வியிலும் இலக்கிய ஆக்கங்களிலும் பெரும் விசைகளை ரூசோவின் (1712-1778) சிந்தனைகள் உட்புகுத்தின. சிறாரின் உரிமைகளை வலியுறுத்தும் ஆக்க எழுச்சியாக அமைந்த அவரது முன்மொழிவுகள் **"இயற்கை மனிதன்"** என்ற எண்ணக்கருவை அடியொற்றி மேலெழுந்தன. வளர்ந்தோரின் அடக்கு முறைகளிலே இருந்து சிறார்கல்வி சிந்தனை நிலையிலும் நடைமுறையிலும் விடுவிக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்திய அவர் தாமாகவே முயன்று செயன்முறைகள் வாயிலாக அறிவையும் அனுபவங்களையும் அவர்கள் திரட்டிக் கொள்ளல் வேண்டுமெனவும், அவ்வாறான சுயகற்றலுக்கு ஆசிரியர் அனுசரணையாக இருத்தல் பொருத்தமுடையது எனவும் வலியுறுத்தினார். ரூசோவின் சிந்தனைகளை அடியொற்றியும் மீளவலியுறுத்தியும் தோமஸ்டே (1748-1789) என்பார். புனைகதைகளைப் படைக்கலானார். அவர் படைத்த நேர்ப்பாத்திரமாகிய ஹரி என்ற சிறுவனும் எதிர்ப்பாத்திரமாகிய ரொமி என்பவனும் புகழ் பெற்ற சிறார் பாத்திரப்படைப்புக்களாயினர். ரூசோவின் சிந்தனைகளை அடியொற்றி இலக்கியங்களைப் படைத்த பிறிதொருவர் மாரிய எட்ஜவோர்த் ஆவர். ஒரு பெண் சிறுமியை கதைத் தலைவியாக வைத்து அவர் எழுதி வெளியிட்ட "ஊதாவண்ணக் குவளை" என்ற நூல் சிறார் இலக்கிய ஆக்கங்களிலே பால்நிலைச் சமத்துவத்தை முன்னெடுப்பதற்கு உதவியது. மேலும் செயல் முறைக் கலைத்திட்டத்தை வளம்படுத்துவதற்கும் அப்பெண்மணியின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தொடர்ந்து எழுச்சியுறத் தொடங்கிய சிறார் உளவியற் சிந்தனைகள் இலக்கிய ஆக்கங்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. சிறார் இலக்கிய்ங்கள் மரபு வழியான தடங்களை விட்டுவிலகி பலநிலைப்பரவல் (Variety) நோக்கி விரிவடையலாயிற்று. வளர்ந்தோருக்கென உருவாக்கப்பட்ட பெரும் இலக்கியங்களைச் சிறார் வாசிப்புக்குக் கொண்டு செல்லும் எளிமை தழுவிய மீளாக்கங்கள் இடம் பெறலாயின. சார்ல்லாம் என்பாரும் அவரது சகோதரியாரும் ஒன்றிணைந்து சேர்க்ஸ்பியரது கதைகளைச் சிறார்வாசிக்கும் படியாக எளிமைப்படுத்தி எழுதினர். இந்த மரபு இன்று பல்வேறு மொழிகளிலும் பின்பற்றப்பட்டுவரும் ஆக்க முறைமையாக இருந்து வருகின்றது. சார்ல்ஸ் கிங்ஸ்லி என்பார் தொன்மையான கிரேக்கத் தொன்மங்களைச் சிறார் வாசித்தறியும் பொருட்டு "மீள்சொல்லமைவுக்கு" (Retold) உட்படுத்தினார்.

வேறு வேறு நாடுகளிலே காணப்படும் பண்பாட்டுக் கோலங்களும் நடை உடை பாவனைகளும் இலக்கியங்களுக்குள் கொண்டு வரப்படும் பிறிதொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படலாயிற்று. உலகப் புரிந்துணர்வைச் சிறாரிடத்து வளர்க்கும் பொருட்டு இவ்வகைச் செயற்பாடு பாட நூல்களில் இடம் பெற்று வருதலும் குறிப்பிடத் தக்கது.

சமூகப் பிரச்சினைகளைச் சிறார் இலக்கியப் புனைவுகளிலே உள்ளடக்கும் செயற்பாடுகள் இருபதாம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கின. கிப்லிங் (1865-1936) என்பாரின் எழுத்தாக்கங்கள் அந்தவகையிலே சுட்டிக்காட்டப்படத் தக்கவை. அதே காலப் பகுதியில் பாரதியாரது சிறார் கவிதைகளிலும் இத்தகைய பண்பு காணப்படுதல் சுட்டிக்காட்டப்படத்தக்கது. கிப்லிங் சாதியப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டினார். பாரதியாரும் "சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்றவாறு சிறாருக்கரிய கவிதைப் புனைவை முன்வைத்தார். கிப்லிங்கைப் பாரதியார் படித்திருக்கலாம்.

சிறார்க் குரிய பெருந் தொகையான நூலாக்கங்களை மேற்கொண்டவர்களுள் ஜாக்கொப் அப்போட் குறிப்பிடத்தக்கவர். ஐ.அமெரிக்காவைச் சேர்ந்த அவர் இருநூறுக்கு மேற்பட்ட நூல்களை இத்துறையிலே ஆக்கியுள்ளார்.

அரசுகளால் ஆக்கம் பெற்ற சமூக நலச் சட்டங்களும், சிறார் நூலாக்கங்களிலே செல்வாக்குச் செலுத்தலாயின. பிரபல நாவலாசிரியர் சார்ல்டிக்கின்ஸ் எழுதிய "ஒலிவர்ருவிஸ்ற்" இங்கிலாந்தில் 1834 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வறுமைச் சட்டத்தின் தெறிப்பாக அமைந்தது. தமிழ்மரபில் சிறார் இலக்கியங்களைப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்த்தல் உண்டு. தமிழில் வழங்கிவரும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகிய பிள்ளைத்தமிழ் அல்லது பிள்ளைப் பாட்டை சிறார் இலக்கியமாகக் கொள்ள முடியாது. "சிறாரைப் பற்றிய" இலக்கியமாகவே அதனைக் கொள்ள வேண்டும். நாம் விரும்புவோரைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடும் மரபே பிள்ளைத் தமிழில் மேலோங்கி நிற்கின்றது.

சிறார் இலக்கியங்களில் வர்க்கச் சார்புடைமை ஆழ்ந்து வேர் பதித்தல் குறிப்பிடத்தக்கது. எழுத்து வடிவிலமைந்த சிறார் இலக்கிய வடிவங்களாகிய பாடல், கதை, நாடகம், முதலியவை, சமூகத்தின் மேல-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கினரின் வயப்பட்டதாகவும் அதே வேளை சமூகத்தின் அடிநிலை மாந்தர்களிடத்தே வாய் மொழி தழுவிய சிறார் இலக்கியங்களே வழக்கிலும் கையளிப்பிலும் இருந்து வருவதாகவும் குறிப்பிடுதல் நடப்பியலின் புலப்பாடுகளாகின்றன.

சிறார் இலக்கியம் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய வகையாக மேலோங்கிவருதலும், சிறார் உளவியல் மற்றும் கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கும் இலக்கிய ஆக்கங்களுக்குமிடையே இணைப்புக்கள் காணப்படுதலும், சிறார் அரங்கு கற்பித்தல் நுட்பமாக முன்னெடுக்கப்பட்டு வருதலும் இணைப்புநிலைக்குறிப்பீடுகளாகின்றன. தமிழ் மரபிலே சிறார் இலக்கியப் புனைவில் ஈடுபாடு காட்டுவோர் பெரும்பாலும் ஆசிரியர்களாகவே இருத்தல் சிறார்கல்விச் செயல்முறை மற்றும் சிறார் இலக்கிய ஆக்கம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையே மீளவலியுறுத்தி நிற்கின்றன.

---

சிறார்க்கான கல்வி உளவியல் மயப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதைப் பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் உளவியல் நிராகரிப்பு மிகுந்து காணப்படுகின்றது. போலி உளவியல் பாங்குகளும் இழையோடிக் காணப்படுகின்றன. நடைமுறையில் காணப்படும் சில குறைபாடுகள் வருமாறு:

1. ஆசிரியர்களிடத்து ஏற்படும் எதிர்மனப்பதிவுகளும் முற்சாய்வுகளும் மாணவர்களிடத்து உளத்தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

2. தமது நடையியலே (Style) மேலானது என்று ஆசிரியர்கள் அவற்றை மாணவர் மீது திணித்து விடுகின்றனர்.

3. மாணவர்கள் தவறாக விடையளிக்கும் வேளைகளில் ஆசிரியர்களுக்குக் கோபம் என்ற மனவெழுச்சியே மேலோங்குகின்றது.

4. மாணவர்கள் ஈட்டுப் புள்ளிகளுக்கும், தரநிலைகளுக்கும் அடிமைகளாக்கப்படுகின்றனர். அதாவது தேர்வுகளுக்கு விடையளிக்கும் பொறிகளாக மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் தேர்வு மேற்குறித்த பண்புகளை மீள வலியுறுத்தி நிற்கின்றது.


5. சிறுவர்களது பாட அடைவுகளுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை அவர்களது விழுமிய அடைவுகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு சிறுவனையும் சிறுமையையும் சிறுமியையும் கற்பவர்களாகவும், கற்பிப்போராகவும் ஒரே நேரத்தில் மாற்றமுறச் செய்யும் இரு பரிமாண அணுகுமுறையே (Two Dimensional Approach) நவீன சிறுவர் கல்வியின் வெற்றிக்கு வித்தாக அமையும். தாம் பெற்ற அனுபவங்களை ஒவ்வொரு சிறவரும் பரிமாற்றம் செய்வோராக மாற்றப்படல் வேண்டும்.

(நன்றி: முனைவர். சபா.ஜெயராசா, 'குழந்தை உளவியலும் கல்வியும்' பக்-138-139)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஆர். லோகேஸ்வரன்,**
ஆசிரிய கல்வியியலாளர்,
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி.

**விசேட கல்வி**

ஒவ்வொரு மாணவரும் தனித்தன்மையுடனும், தனிப்பட்ட அவர்களுக்கே உரித்தான ஆளுமையுடனும் செயற்படுவதை நாம் அறிவோம். இத்தகைய தனித்தன்மையை மாணவரின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி சமூக வளர்ச்சி என சகல கூறுகளிலும் காணலாம்.

# மாணவரின் பல் வகைமையும் கல்வியூட்டலும்

ஒவ்வொரு மாணவரும் தனித்தன்மையுடனும், தனிப்பட்ட அவர்களுக்கே உரித்தான ஆளுமையுடனும் செயற்படுவதை நாம் அறிவோம். இத்தகைய தனித்தன்மையை மாணவரின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி சமூக வளர்ச்சி என சகல கூறுகளிலும் காணலாம். அதிலும் மாணவர்களுக்கிடையிலான இவ்வேறுபாடுகளை விஷேடமாக அவர்களது நுண்ணறிவு, நாட்டங்கள், கவர்ச்சிகள், செய்திறன்கள், மனவெழுச்சி வெளிப்பாடுகள், ஆர்வங்கள், அவாக்கள், மனப்பான்மைகள் போன்ற ஒவ்வொரு பண்பிலும் காணலாம். மேற்கூறிய பண்புகள் அனைத்து மாணவர்களிடமும் இயல்பாகவே உண்டு. ஆனால் இவை ஒவ்வொன்றின் அளவும், விகிதமும் வேறுபடுகின்றன என்பதே பொருளாகும். அதிலும் இப்பண்புகள் உண்டு, இல்லை என்பதைவிட அது வேறுபட்ட அளவுகளில் காணப்படுகின்றது என்பதே உண்மையாகும். மாணவரிடையே காணப்படும் இவ்வேற்றுமைகள் பற்றிய அறிவு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணை செய்ய ஆசிரியருக்கு இன்றியமையாததாகின்றது. அதாவது வகுப்பறையில் பாடங்களை கற்பிக்க தொடங்கும் முன்னர் மாணவர்களுக்கிடையிலான வேற்றுமைகளை மிக முக்கியமாக கருத்திற் கொள்ள வேண்டும் என்பது பற்றி ரூசோ, பெஜ்டலோஜி, புரோபல், மொன்டீசூரி போன்ற சிறந்த கல்வியியலாளர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டைய காலங்களில் மாணவர்களுக்கிடையே இவ்வேறுபாடுகள் காணப்பட்டபோது இவற்றை அளவிட எந்த முறைகளும் காணப்படவில்லை. ஆயினும் கால்டன், பினே போன்றவர்களின் முயற்சியால் இன்று மாணவர்களுக்கிடையிலான இப்பண்புகளை அளவிடக்கூடியதாகவும், அதன் அடிப்படையில் வகைப்படுத்தி பார்க்கக்கூடியதாகவும், அதன் அடிப்படையில் வகைப்படுத்தி பார்க்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இவ்வடிப்படையில் ஆசிரியர்கள் இன்று வகுப்பறையில் அனைத்து மாணவரையும் சில பண்புகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்வதுடன் அம் மாணவர்களை வெவ்வேறு வகையினராக பாகுபடுத்தி பார்க்கும் தன்மை அவர்களிடம் இயல்பாகவே ஏற்பட்டுவிடுவதுண்டு. அதனடிப்படையில் மாணவர்களை எவ்வகையான பாகுபாட்டின் அடிப்படையில் நோக்குகின்றோம், அவர்களுக்கான கல்வியூட்டலின் போது எவ்வகையான நுட்பங்களை கையாள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றோம் என்பது பற்றியே இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திறன்மிக்கோர்** *(அறிவு திறன் மிகுதியாக பெற்றோர்)* பயனுடைய ஏதேனுமொரு துறைசார்பாக குறிப்பிடத்தக்க அளவு திறமையினையும், ஆற்றலையும் கொண்டுள்ள மாணவர்கள் திறன்மிக்க மாணவர்கள் என்ற வகைக்குட்படுத்தப்படுகின்றனர். டிஹாம் என்பவர் இத் திறன்மிக்க மாணவர்களிடம் இருக்கக்கூடிய பண்புகளை பட்டியல்படுத்தியுள்ளார். அவையாவன:

- விரைவாகவும், இலகுவாகவும் கற்கும் தன்மை நடைமுறை அறிவினையும், விடயத்தானத்தையும் கூடுதலாக பண்படுத்தும் தன்மை.
- காரணகாரிய தொடர்புரீதியாக விடயங்களை தெளிவாக பகுத்தறியும் தன்மை.
- மற்றவர்களின் அழுத்தமின்றி தான் கண்டவற்றை, கேட்டவற்றை, வாசித்தறிந்தவற்றை உள்வாங்கிக் கொள்ளும் தன்மை.
- இலகுவாக, சரியாக சொற்பதங்களை கையாளும் தன்மை.
- முன்கூட்டியே தான் கற்கவிருக்கும் பாடப்புத்தகங்களை வாசித்து விளங்கிக் கொள்ளும் தன்மை.
- தான் நிறைவேற்ற வேண்டிய வீட்டுப் பணிகளை நேரகாலத்துடனேயே செய்து முடிக்கும் தன்மை.
- அடிப்படையிலேயே வியக்கத்தக்க கருத்துக்களை கூறும் தன்மை.
- கற்றலில் ஆர்வத்துடன் விரைவாக விடையளிக்கும் தன்மை.
- கூடுதலான விடயங்களை அறிய வேண்டும் என்ற தன்மை என்பனவாகும்.

குறிப்பாக இவரின் (டிஹாம்) கருத்துப்படி திறன்மிக்கோர் பிற மாணவர்களைவிட, உடற்பண்பு, சமூக முதிர்ச்சி, மனவெழுச்சி முதிர்ச்சி ஆகியவற்றிலும் இவர்கள் முன்னிலையில் நிற்பர் என்கிறார். பொதுவாக பாடசாலைகளில் விரிசிந்தனை கொண்ட ஆக்கத்திறன் உடைய மாணவர்களும் திறன்மிக்கோர் என்ற வகைக்குள்ளேயே பொதுவாக நோக்கப்படுகின்றனர்.

**திறமைக்கேற்ப சாதனை புரியாதோர்**

வகுப்பறையில் சில மாணவர்கள் அடையவேண்டிய தேர்ச்சி மட்டத்தை அடையாதவர்களாகவும் மதிப்பீட்டு சோதனையின்போது குறைந்த புள்ளிகளை பெற்றும் காணப்படுவர். இவர்கள் பாடசாலையில் தாம் கற்கும் பாடங்களில் ஓரிரு பாடங்களில் அல்லது எல்லாப் பாடங்களிலும் இந்நிலையில் இருப்பர். ஆனால் இவர்களின் நுண்ணிறிவு ஈவு உயர்ந்த மட்டத்தில் இருக்கும். இவர்கள் திறமையான மாணவர்களாக இருப்பினும் அவர்களின் பாடரீதியான தேர்ச்சி குறைவானதாக இருக்கும். இம் மாணவர்கள் மீத்திறன் மாணவர்களாக (Gifted Student) அல்லது சாதாரண நுண்ணறிவினை உடைய மாணவர்களாக (Average Students) காணப்படுவர். இவர்களிடம்

- கடந்த காலங்களில் கூடுதலான தேர்ச்சி மட்டத்தை காட்டி பின்னர் நாளடைவில் தேர்ச்சிமட்டம் படிப்படியாக குறைந்து செல்லும் தன்மை
- குறைந்த தேர்ச்சி மட்டத்தை காட்டினாலும் பரீட்சைகளில் தோல்வியடையும் அளவுக்கு புள்ளிகளை பெறாமல் இருக்கும் தன்மை
- இவர்களால் முன்வைக்கப்படும் விடைகள், அணுகுமுறைகள் புதியனவாகவும் ஆசிரியருக்கே ஓரளவு புதிராகவும் இருக்கும் தன்மை
- குறிப்பிட்ட சில பாடங்களில் மட்டும் குறைவான புள்ளிகளை பெறும் தன்மை (Specific Backwardness)

வகுப்பறையில் சில மாணவர்கள் அடையவேண்டிய தேர்ச்சி மட்டத்தை அடையாதவர்களாகவும் மதிப்பீட்டு சோதனையின்போது குறைந்த புள்ளிகளை பெற்றும் காணப்படுவர்.

ஆகிய பண்புகளை கொண்டிருப்பர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

**பின்நிலை மாணவர்கள்**

ஒரு பிள்ளை தன்னகத்தேயுள்ள திறன்களை பயன்படுத்த முடியாதவனாகவோ அல்லது தன்னிடம் மறைந்துள்ள ஆற்றல்களை கல்விசார் அடைவுகளின் பொருட்டு வெளிக்காட்ட இயலாத ஒரு தன்மையை கொண்டிருப்பின் அவர்களை பின்நிலை மாணவர்கள் எனலாம். இஸ்கொனல் என்பார் “ஒத்த வயதினையுடைய மாணவர்களுள் ஒப்பீட்டு ரீதியில் ஒரு வயதினையுடைய மாணவன் ஏனையோரைவிட கல்விசார் விடயங்களில் குறிப்பிட்டளவு பலவீனங்களை வெளிக்காட்டுவானாயின்” அவன் பின்நிலை மாணவன் என அடையாளப்படுத்துகிறார். இவ்வாறாக மாணவர்களின் இப்பின்நிலைக்கு நுண்ணறிவு ஈவு, சூழ்நிலை ஆகிய இரண்டுமே அடிப்படையாக அமைகின்றது என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்பின்நிலை மாணவர் என்ற வகைக்குள் மந்தமானவர்கள், பொதுவாக பின்தங்கியயோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த பின்நிலை கொண்டவர்களும் அடங்குவர். இதில் மந்தமானவர்கள் என்னும் போது அவர்கள் கற்பிக்கப்படும் கூடுதலான பாடங்களில் சாதாரண முன்னேற்றத்தினை கூட காண முடியாதவர்களாக இருப்பர். அடுத்து பொதுவாக பின்தங்கியோர் என்னும் போது அவர்கள் பொதுவாக பாடங்களில் பின்தங்கியிருப்பினும் பகுத்தறிவின் காரணமாக இது ஏற்பட்டதல்ல. ஆசிரியர் பற்றிய பொருத்தமற்ற மனப்போக்கு, பாடசாலை வரவு குறைவு, பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள் போன்ற புறக்காரணிகளால் பின்நிலைக்கு தள்ளப்பட்டிருப்பர். இறுதியாக குறித்த பின்நிலை கொண்டோர் என்னும் போது ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் பலவீனம் உடையவர்களும் ஏனைய பாடங்களில் சராசரியான புள்ளிகளை பெறுபவர்களும் இதில் அடங்குவர். இவர்களின் இந்நிலைக்கு தாம் அல்லது புறக்காரணிகள் காரணமாக அமைகின்றது.

**இப்பின் நிலை மாணவர்கள்**

* எழுதுதல் வாசித்தல் குலைவு
* எண்சார் குலைவு
* கவனித்தல் குறைபாட்டுக் கோளாறு

கவனித்தல் குறைபாடு, அதீத செயற்பாட்டு கோளாறு ஆகியவற்றை கொண்டிருப்பர் என்கின்றனர் உளவியலாளர்கள்.

மேற்குறிப்பிட்ட பண்புகளை கொண்டவர்களை பொதுவாக பின்நிலைப்பட்டோர் என கூறப்பட்ட போதும் இத்தகையோரது கல்வி முன்னேற்றத்தை ஓரளவு சிறப்பாக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் இன்று இவர்கள் மெதுவாக கற்போர் (Slow Learners) என அழைக்கப்படுகின்றனர்.

**உடற், புலக் குறைபாடு உடையோர்**

வகுப்பறையில் ஒரு சில மாணவர்கள் உடற்குறைபாடுகளுடனோ அல்லது புலக்குறைபாடுகளுடனோ இருக்க கூடும் (பார்வை, கேள்வி, பேச்சு, அங்கங்கள், உடலியக்கங்கள் ஆகியவற்றில் குறைபாடு உடையவர்கள்). இதில் உடற், புலக்குறைபாடும் மிக தீவிரமாக இருப்பின் அவர்கள் தனிப்பாடசாலைகளில் கல்வியை கற்பர். ஆனால் இக்குறைபாடுகள் சிறிதளவு உடையோர் சாதாரண பாடசாலைகளிலேயே பெரும்பாலும் தமது கல்வியை தொடர்கின்றனர். இவ்வாறான மாணவர்களை வெளித்தோற்றத்தில் அடையாளம் காணக்கூடியதாக பல சந்தப்பங்களில் அமையும் போதும் சில சந்தர்ப்பங்களில் அடையாளம் காண்பது ஆசிரியருக்கு கடினமானதாக அமையும். காரணம் இவ்வகையான குறைபாடுகளை உடையவர்கள் தமது குறைபாடுகளை வெளிக்காட்ட விரும்பாமையே ஆகும்.

மேற்படி குறைபாடுகள் காரணமாக இவ்வகையான மாணவர்கள் அனேகமாக மனவெழுச்சி சமநிலை குழைவுடனும், ஆளுமை வளர்ச்சியில் பாதிப்புடையவர்களாகவும் இருப்பர். அத்துடன் தாம் எதிர்நோக்கும் பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளும் குறைவாகவே இருக்கும். மேலும இவ்வகையான மாணவர்கள் தமக்குள்ள குறைபாடுகள் காரணமாக வகுப்பறைக்குள்ளும், வெளிச்சூழலிலும் ஒதுங்கியிருக்கவே முயல்வர். இவர்களையும் ஆசிரியர் மிக சரியாக அடையாளம் கண்டு கொள்ளுதல் அவசியமாகும்.

**பொருத்தபாடற்ற நடத்தை கொண்டோர்**

மாணவரது தேவைகளும், நோக்கங்களும் ஓரளவேனும் பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் அவர்களது மனதுக்குள்ளும், அவர்கள் வாழும் சூழ்நிலைக்கிடையேயும் சமநிலை காணப்படும். அவ்வாறான நிலையில் மனமுறிவுகளும், மனவெழுச்சி போராட்டங்களும் பெருமளவில் இருக்க மாட்டாது. அது மாணவர்களிடம் பொருத்தமற்ற தவறான நடத்தைகளை தோற்றுவிக்காது. இதற்கு மாறாக தமது தேவைகள், நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து சமநிலை குழைவு ஏற்பட்டு அம்மாணவர்களிடம் மனமுறிவுகளும், மனவெழுச்சி போராட்டங்களும் எழுவது இயல்பு. இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தோன்றக்கூடும். இவ்வாறாக பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தீவிரமாக எழும்போது சிலவேளைகளில் சமூகவிரோத நடத்தைகளிலும் மாணவர் ஈடுபடுவர். இதனையே நெறிபிறழ்வு நடத்தை என்கின்றோம்.

ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பாடசாலை மாணவர்களில் 20% ஆனோர் கவலையளிக்கக்கூடிய பொருத்தப்பாடற்ற நடத்தையை கொண்டுள்ளனர். 8% ஆனோர் பொருத்தப்பாடற்ற நடத்தைகள் மிக தீவிரமாக காணப்படுவதாகவும் முடிவுகள் கூறுகின்றன. எமது நாட்டு பாடசாலைகளை பொருத்தவரையிலும் இது சில வேளைகளில் ஏற்றுக்கொள்ள கூடியதாகவே அமைகிறது. பொருத்தப்பாடற்ற நடத்தை கொண்ட மாணவர்களின் செயல்கள் பெரும்பாலும் சமூகத்துக்கு எதிரானதாகவே காணப்படும். குறிப்பாக இம் மாணவர்கள்,

* ஏனைய மாணவர்களின் பொருட்களை திருடுதல்
* பாடசாலைக்கு தொடர்ந்து வராதிருத்தல்
* காரணமின்றி பொய் கூறுதல்
* பிறரது பொருட்களை உடைத்தல்
* பிற மாணவர்களுக்கு துன்புறுத்தல்
* மற்றவர்களுடன் எப்போதும் சண்டையிடல்
* ஆசிரியருக்கு கற்பித்தலின் போது தொல்லை கொடுத்தல்
* எதிர்ப்பு மனப்பான்மையை கொண்டிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வகுப்பறையில் மனவெழுச்சிசார் நடத்தைகள் தீவிரமாக வெளிக்காட்டல்

* நெகிழ்ச்சியற்ற இறுகிய நிலையில் நடத்தையை வெளிகாட்டல்

* தமது குறைபாடுகளை பிற மாணவர் மீது சுமத்துதல்

* பொருத்தமற்ற பாலியல் தொடர்புகளில் ஈடுபடல்

போன்ற பண்புகளை அனேகமாக வெளிக்காட்டுவர்.

**படைப்பாற்றல் கொண்டோர்**

"எந்த ஒரு விடயம் தொடர்பிலும் அங்கு காணப்படும். வெற்றிடங்களை நிறைவு செய்யக்கூடியதாகவும், இல்லாதிருக்கும் அம்சங்களை வெளிக்கொண்டுவர கூடியதாகவும், புதிய கருத்தியல் வடிவங்களை உண்டு பண்ணக்கூடியதாகவும் உள்ள ஓர்வகை தொழிற்பாடு நிறைந்த ஆற்றலை கொண்டவர்கள்" படைப்பாற்றல் கொண்டோர் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். "எழக்கூடிய முரண்பாடுகளை தீர்க்கக்கூடிய ஒருவகையான ஆற்றல்" இவர்களிடம் இயல்பாகவே காணப்படும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக வகுப்பறையில் அனைத்து மாணவர்களிடமும் இப்படைப்பாற்றல் காணப்பட்ட போதும் அவை வேறுபட்ட அளவில் வெளிப்படுத்தப்படுவதை நாம் காணலாம். இது மாணவரின் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப வேறுபடும். இப் படைப்பாற்றல் கொண்ட மாணவர்களின் விஷேட பண்புகளாக,

* தனது கற்பனைதிறனை மீள் பரிசீலனை செய்யும் ஆற்றல்.

* உணர்திறன் அல்லது அனுபவநிலை ஆகியவற்றின் ஊடாக இரசணையியல் அம்சங்களை தோற்றுவிக்கும் ஆற்றல்.

* புதிய கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல்.

* பல்வேறு மூலகங்களை அடிப்படையாக கொண்டு எண்ணக்கருக்களை உருவாக்கும் ஆற்றல்.

போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வகையான மாணவர்களை பெற்றோர் அல்லது சமூகம் இனங்காணத் தவறும் போதும் ஆசிரியர்களே பெரும்பாலும் இனங்கண்டுக் கொள்வர்.

மேற்குறிப்பிட்டவாறாக பல்வகைமை பண்புகளை கொண்ட மாணவர்களை வகுப்பறையில் அடையாளம் கண்டு கொண்டதன் பின் ஆசிரியர் இவ்வனைத்து வகையான மாணவர்களும் தேர்ச்சி மட்டத்தை எய்தும் வகையில் தனது போதனைகளை வடிவமைக்க வேண்டியது அவசியமானதாகும். அந்தவகையில், திறன்மிக்க மாணவர்களை எடுத்துக் கொண்டால் அம்மாணவர்களை சரியாக இனங்கண்டு அன்புடன் அவர்களின் தேவைகளை கவனித்து, அவர்களின் ஆற்றலுக்கேற்ப கல்வி வாய்ப்புக்களை வழங்கின் அவர்கள் நல்வளர்ச்சி பெறவும், சமுதாயம் முன்னேற்றம் பெறவும் உதவும். திறன்மிக்க மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் போது சிக்கலான பாடப்பிரச்சினை, அறிவுக்கு அறைகூவலாக அமையும் பாட ஒப்படைகள், கண்டறிதலை ஊக்குவிக்கும் கற்பித்தல், முறைகள் போன்றவற்றையும் அடிப்படையாக கொள்ளுதல் வேண்டும். மேலும் இம்மாணவர்களுக்கு விஷேடமாக வகுப்பறை செயற்பாடுகளின் போது முன்னுரிமை வழங்கினாலும் கற்பித்தல் தவிர்ந்த ஏனைய பாடசாலை நடவடிக்கைகளில் பிற மாணவர்களுடன் இணைந்து பிறரைப்போலவே நடத்தப்படுதல் வேண்டும்.

> **"எந்த ஒரு விடயம் தொடர்பிலும் அங்கு காணப்படும். வெற்றிடங்களை நிறைவு செய்யக்கூடியதாகவும், இல்லாதிருக்கும் அம்சங்களை வெளிக்கொண்டுவர கூடியதாகவும், புதிய கருத்தியல் வடிவங்களை உண்டு பண்ணக்கூடியதாகவும் உள்ள ஓர்வகை தொழிற்பாடு நிறைந்த ஆற்றலை கொண்டவர்கள்" படைப்பாற்றல் கொண்டோர் என அடையாளப்படுத்தப்படுகின்றனர்.**

இவ்வாறான திறன்மிக்க மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களிடமும் விஷேட பண்புகள் தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்கள் திறன்மிக்கோராகவும், பல்துறைசார்ந்த ஆற்றல் உடையவர்களாகவும், மாணவரை மேலும் உற்சாகப்படுத்தும் தன்மை கொண்டவர்களாகவும், மாணவர் சிலவேளை தம்மை மிஞ்சும் வகையில் அறிவாற்றலை வெளிப்படுத்தும் போது சினம், பொறமை போன்றவற்றால் உந்தப்படாமல் அவர்களது ஆற்றலை பாராட்டும் திறன் மிகுதி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவ்வாறான மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் பல்துறைசார்ந்த ஆற்றல், சிறந்த ஆளுமை என்பவற்றை கொண்டிருத்தல் மிக அவசியமானதாகும்.

அடுத்து திறமைக்கேற்ப சாதனை புரியாதோரை எடுத்துக் கொண்டால் திறமை இருந்தும் தேர்ச்சி மட்டத்தில் குறைவாக இருப்பதற்கான காரணத்தை முதலில் கண்டறிந்து அவற்றை நீக்கி அவர்களின் கல்வி முன்னேற்றத்தை ஊக்குவிப்பது ஆசிரியரின் கடமையாகும். அம்மாணவர்களின் தேர்ச்சி மட்டம் குறைந்து செல்ல சூழ்நிலையே பிரதான காரணமாகும். அதை அவதானித்து முடிந்தவரை மாற்றியமைப்பதில் ஆசிரியர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மேலும் அம்மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப செயற்பட அவர்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்புகளை வழங்குதல் மிக அவசியமாகும். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை புரியாவிட்டாலும் திறமையானவர்களாக இருப்பதால் இவர்களின் அடைவு ஊக்கி உயர மாணவரை உற்சாகப்படுத்தும் வகையில் ஆசிரியர் செயற்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

பின்னிலைபட்ட மாணவர் என்ற வகைக்குள் அடக்கப்படுபவர்களின் அப்பின்நிலைக்கு பரம்பரை (நுண்ணறிவு), அல்லது சூழ்நிலை என்பனவே காரணமாக அமைகிறது. இதில் பரம்பரையை எம்மால் மாற்றமுடியாவிடினும் சூழ்நிலை காரணிகளை கண்டறிந்து அவற்றை நீக்கி அவர்களது குறைந்த அறிவுத் திறனுக்கேற்ற கல்வி முறையை பயன்படுத்தினால், பின்னிலை மாணவர்களும் சாதாரண நிலைக்கல்வியை பெற்று நல்ல குடிகளாக வாழ உதவலாம். மாறாக இவர்களின் பின்நிலைக்கு நுண்ணறிவு குறைபாடே காரணமாக இருப்பின் அதனை வெளிப்படுத்தாமல் அவர்களை தனியாள் ஆய்வுக்கு (Case Study) உட்படுத்தி அவர்களின் உண்மைநிலை கண்டறியப்பட்டு மாற்றம் பெற உதவலாம். இப்பின்நிலைப்பட்ட மாணவர்களுக்கு குறிப்பாக ஆசிரியரிடமிருந்து அன்பு, பரிவு, ஆதரவு, ஏற்பு போன்றவை மிக அவசியமாகும். இம்மாணவர்களுக்கான கல்வியூட்டலின்போது

- சூழ்நிலையை மேம்படுத்தல்
- குறையறிதல்
- குறைதீர்த்தல்
- தனிக்கவனம் செலுத்தல்
- புதிய கற்பித்தல் உத்திகளை பயன்படுத்தல்

போன்ற நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பின்நிலைப்பட்ட மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் கற்றல் - கற்பித்தலின் போது சில நுட்பங்களை கையாள வேண்டியுள்ளது. அவையாவன;

* தன்னம்பிக்கை, தற்கருத்தை வளர்த்தல்
* சிறிய முன்னேற்றத்துக்கும் மீளவலியுறுத்தல்களை வழங்குதல்
* உடல், உள தேவைகளை நிறைவு செய்தல்
* தேவையான சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பை வழங்குதல்
* பாடங்களையும், செயற்பாடுகளையும் பயனுள்ள முறையில் அமைத்தல்
* ஆர்வத்துடன் கற்பித்தல்
* அடைவு ஊக்கி உயர மாணவர்களை உற்சாகப்படுத்தல்

மாணவரின் தேவை, ஆர்வம், கவர்ச்சி என்பவற்றுக்கேற்ப கற்பித்தல் முறை, துணைக்கருவிகளை பயன்படுத்தல் என்பவற்றை விஷேடமாக குறிப்பிடலாம்.

அடுத்த உடற்குறைபாடு/புலக்குறைபாடு உடைய மாணர்கள் விஷேட தேவை உடையவர்களாகும். இம் மாணவர்களை பரிவுடன் கவனித்து, வகுப்பறையில் நண்பர்கள் உருவாகும் சூழலை ஏற்படுத்தி, சில வகுப்பு செயல்களில் இருந்து விடுவித்து இவர்களை ஊக்குவித்தால் உயர் அடைவு மட்டத்தை பெறுவர். இவ்வகையான மாணவர்கள் வகுப்பறையில் இருப்பின் ஆசிரியர் இவர்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டியவை:

* பிறரது பரிகாசத்துக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளல்
* தாழ்வு மனப்பான்மை ஏற்படாது பாதுகாத்தல்.
* தன் குறைபாட்டை உணர்ந்து அதனால் தளர்வுறும் நிலை இருப்பின் பாதுகாத்தல்.
* மனவெழுச்சி சமநிலை, ஆளுமை குறைபாடும் உருவாகாமல் பாதுகாத்தல்.
* பாடசாலையில் வெற்றி வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்.
* சுய எண்ணக்கரு உருவாகும் வகையில் நடந்துகொள்ளல்.
* பிறருடன் கூடி செயல்பட அதிக சந்தர்ப்பம் வழங்குதல்.
* ஊக்கம், பாராட்டு என்பவற்றை வழங்குதல்.
* அவர்கள் பாவிக்கும் உபகரணங்கள் இருப்பின் அவற்றை முறையாக பாவிக்க உதவுதல்.
* ஏனைய மாணவர்களும் இம் மாணவர்களுக்கு உதவ தூண்டுதல்.

போன்றவற்றுடன் இவ்வகையான மாணவர்களுக்கு விஷேடமாக ஆசிரியரின் அன்பு, பரிவு என்பனவும் மிக அவசியமாகும்.

அடுத்து பொருத்தப்பாடற்ற நடத்தை கொண்ட மாணவர்களுக்கு கல்வியூட்டல் தொடர்பாக நோக்கின் இம் மாணவர்களிடம் பிழையான அல்லது பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தோன்றுவதற்கான காரணங்களை முதலில் ஆசிரியர் கண்டறிதல் வேண்டும். உதாரணமாக ஒரு மாணவன் எப்போதும் பொய் கூறுவானாயின் அவ்வாறு அவன் கூறுவதற்கான அடிப்படையாக உள்ள காரணத்தை முதலில் கண்டறிதல் வேண்டும். அவ்வாறு கண்டறிந்தபின் அவ் பொருத்தமற்ற நடத்தையை நீக்கி நல்வழிப்படுத்துவதே சிறந்தது. இவ்வாறாக நல்வழிப்படுத்துவதற்கான ஒழுக்க பயிற்சியை வழங்குதல் அல்லது உளமருத்துவரின் உதவியை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இவற்றுடன் இவ்வாறான மாணவர்களுக்கு அன்பு, பரிவு, இரக்கம் என்பவற்றை வெளிப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதுடன் அவர்களுக்கு வெற்றிவாய்ப்பு, சுய-எண்ணக்கரு, தன்னம்பிக்கை என்பவற்றை ஏற்படுத்தி அவர்மீது கூடிய அக்கறை காட்டுதல் வேண்டும். இவ்வாறான செயல்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ உதவலாம்.

இறுதியாக பாடைப்பாற்றல் கொண்ட மாணவர்களை எடுத்துக் கொண்டால் மரபு ரீதியான கற்பித்தல் முறைகளை பின்தள்ளி அவர்களின் கற்பனை, ஆற்றல், வெளியீடு என்பவற்றிற்கு ஏற்ப அவற்றை விருத்தி செய்யும் வகையில் கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைப்பின் அது அம்மாணவர்களுக்கு கூடிய பயனை கொடுக்கும். இவற்றுடன் படைபாற்றல் உள்ள மாணவர்களை மதிப்பீடு செய்யும் போது வெறுமனே எழுத்துப் பரீட்சையை மட்டும் அடிப்படையாக கொள்ளாமல் அவர்களின் நடைமுறை ஆற்றலுக்கு முன்னுரிமையளித்து செயற்படுதல் மிக அவசியமாகும்.

**முடிவுரை**

மாணவர்களிடம் காணப்படும் வேறுபாடுகளை கவனத்தில் கொண்டு செயற்படும் ஆசிரியரால் மட்டுமே மாணவரது திறன்கள், தேவைகள், கவர்ச்சி-கள் ஆகியவற்றுக்கேற்ப கல்வியினை வழங்கி மாணவர் குறிப்பிட்ட தேர்ச்சியினை அடைய உதவமுடியும். மாறாக பொதுவாக குறிப்பிட்ட திறனுடைய மாணவர்களுக்கேற்ப போதனைகளை திட்டமிடும் போது அது சில மாணவர்களை புறக்கணிப்பதாகவும், சில மாணவர்களுக்கு சலிப்பூட்டுவதாகவும் கூட அமைந்துவிடும். அத்துடன் அது வகுப்பறை முகாமைத்துவ பிரச்சினைகளைகூட சில வேளைகளில் தோற்றுவித்துவிடும். எனவே வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களையும் (திறன்மிக்கோர், திறமை இருந்தும் சாதனை புரியாதோர், பின்நிலையில் உள்ளோர், உடல் புல குறைபாடு உடையோர், பொருத்தப்பாடற்ற நடத்தை உடையோர், படைப்பாற்றல் கொண்டோர், ஆக்கத்திறன் உடையோர்) கருத்திற் கொண்டு அவர் அவர் நிலைக்கேற்ப கல்வியை பெற உதவுவது ஆசிரியரின் பிரதான கடமையாகும். இதன் மூலமே ஆசிரியர் கற்பித்தல் பணியும் வெற்றியடையும் என்றால் அது மிகையாகாது.

பொதுவான கற்றல் பின்னடைவு, சிறப்பார்த்த பாடங்களிலே கற்றல் பின்னடைவு என்றவாறு பின்னடைவுகளைப் பகுத்து ஆராயவேண்டியுள்ளது. பின்னடைவை நன்கு விளங்கிக் கொள்வதற்கும். கண்டு பிடிப்பதற்கும், வழிகாட்டுவதற்கும் ஆசிரியர் முதற்கண் விரிவான ஒப்புப் பட்டியல்களை (Check Lists) தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.

மாணவரின் ஆக்கங்களை, குறிப்பேடுகள் முதலியவற்றிலிருந்தும் குறித்த பின்டைவுகளை இனங்காணலாம். மாறி எழுதுதல், தலை கீழ்ப்பட எழுதுதல், தொடர்பின்றிக் கதைகூறல் எழுத்துக்களை இனங்காண்ாது வாசித்தல், பொருள்களைப் பொருத்தமாக இணைக்க முடியாதிருத்தல், முதலியவை பின்னடைவுக்குச் சில உதாரணங்களாகும்.

பின்னடைவுகளை நீக்குவதற்கு ஆசிரியர் பின்வரும் நுண் உபாயங்களைப் பயன்படுத்தலாம்.

1. தனியாள்மயக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் (IEP)
2. சிறப்பார்ந்ததும் தனித்துவமானதுமான கற்பித்தல் உபாயங்களைப் பயன்படுத்துதல்.
3. புதிய முறையியல்களைப் பயன்படுத்துதல்.
4. சீர்மியத்தோடு (Counselling) இணைந்த கற்பித்தலை மேற்கொள்ளல்.
5. அறிகைச் செயல்முறையை மீள்வடி
6. பல்லுணர்வுச் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல்.

(நன்றி: முனைவர். சபா.ஜெயராசா, 'குழந்தை உளவியலும் கல்வியும்' பக்-76-77)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஏ.சி. யோர்ச்**
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்.கல்வி வலயம்.

**விசேட கல்வி**

இன்று விஷேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை சாதாரண பாடசாலைகளில் சாதாரண வகுப்புகளில் உட்படுத்துதலானது உலகெங்கிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் மிகவும் முன்னேற்றகரமான ஓர் அம்சமாக மாறியுள்ளது.

# ஆசிரியரும் உட்படுத்தல் கல்வியும்.

> "Don't call us disabled. We are differently abled, we have right to do anything, which people around us are doing"
>
> Participation at national net work seminar Bombay 1992

**அறிமுகம்**

புத்தாயிரம் ஆண்டிற்கான அபிவிருத்தி இலக்குகளில் ஐக்கிய நாடுகள் சபையானது Quality Education, Access to Education எனும் இரு இலக்குகளையும் 2015 ஆம் ஆண்டளவில் எய்தமுடியும் என எதிர்வு கூறிவருகின்றது. Access to Education அதாவது எல்லோரும் கல்வியினை பெற்றுக் கொள்ளல் என்ற வேலைத்திட்டத்தில் உட்படுத்தல் கல்வி முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இன்று விஷேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை சாதாரண பாடசாலைகளில் சாதாரண வகுப்புகளில் உட்படுத்துதலானது உலகெங்கிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் மிகவும் முன்னேற்றகரமான ஓர் அம்சமாக மாறியுள்ளது. இப் புதிய போக்கானது மாற்று வலுக் கொண்டோரை அல்லது குறைபாடுகளைக் கொண்டோரை வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் உட்படுத்தல் எனவும் கருதப்படுகின்றது. இதனால் விஷேட கல்வியில் உட்படுத்தல் கல்வியானது தற்போது ஒரு கல்வித்தத்துவமாக மாறியுள்ளதுடன் இதற்கான உளவியல் காரணிகளும் பலமடைந்து வருகின்றது. வேறுபாடுகள் இன்றி சகல பிள்ளைகளினதும் கல்வியின் தரத்தினை இது மேம்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது.

**உட்படுத்தல் கல்வி என்றால் என்ன?**

கல்வித்துறையில் பிரயோகிப்பதற்கென பொருத்தமானதெனத் திருப்திபடும் அளவுக்கு இதற்கான வரைவிலக்கணம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. இதனால் உட்படுத்தல் கல்வி தொடர்பான பல விளக்கங்களும் வரைவிலக்கணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் வரைவிலக்கணங்கள் சிலவற்றையும் விளக்கங்கள் சிலவற்றையும் நோக்கும் போது தோமஸ் என்பவர் 1997ல் பின்வருமாறு கூறுகின்றார்.

"சகல பிள்ளைகளையும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளும் இடமே உட்படுத்தல் பாடசாலையாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீபா (1996ல்) என்பவர் கூறுகையில் உட்படுத்தல் என்பது "சகல பிள்ளைகளுக்கும் வேறுபாடு காட்டாத வகையில் பாடசாலை ஒழுங்கமைப்பினை உருவாக்கிக் கொள்ளும் ஒரு செயல் முறையாகும்" என்கிறார்.

"பாடசாலைத் தொகுதியொன்றில் பங்குபற்றலை அதிகரிக்கும் அதிகரிக்கும் அதேவேளை அதிலிருந்து விலகிச் செல்லலை குறைக்கும்" என Potts (1977) என்பவர் விளக்குகின்றார்.

உட்படுத்தல் கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களும் வரைவிலக்கணங்களும் வேறுபடுவதற்கு உட்படுத்தல் கோட்பாடுகள் பல அபிப்பிராயங்களின் மீது உருவாக்கப்பட்டுள்ளது காரணமாகும். சிலர் பிள்ளைகளுக்கிடையில் வேறுபாடுகளை விட ஒற்றுமைகளே கூடுதலாக உள்ளன. எனவே குறைபாடுகளைக் கருத்தில் கொள்ளாது சகலரும் கற்க முடியும் என்ற அபிப்பிராயங்களில் தமது விளக்கத்தினை முன்வைக்கின்றனர். இன்னொர் வகையினர் ஒரு பிள்ளைக்குரிய இடர்பாடு கற்றலுக்கு தடையாக அமையுமாயின் அதனை வெற்றி கொள்வதற்கு தேவையான போதனைசார் உதவியினை ஆசிரியர் வகுப்பறையில் வழங்க முடியும் என்ற கருத்தியலின் அடிப்படையில் உட்படுத்தல் கல்விக்கு வியாக்கியானம் செய்கின்றனர். இன்னும் வேறுசிலர் ஒருவரது உடலின் ஒருபகுதியில் ஏற்படும் ஊனத்தினை முழு உடலுக்கும் பொதுமைப்படுத்த முடியாது என்பதினை விளங்கி கொண்டு கற்றலானது எப்போதும் சமவயதுக் குழுவினரின் ஒத்தாசையுடனும் பங்கு பற்றலுடனும் நிகழ்வது என்ற அபிப்பிராயங்களில் தமது வரைவிலக்கணங்களை முன்வைக்கின்றனர். இக்காரணங்களினால் உட்படுத்தல் பற்றிய பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

உண்மையில் உட்படுத்தல் என்பது ஒரு வேலைத் திட்டமல்ல. உட்படுத்தல் என்பது ஒரு தொகுதி எண்ணக் கருக்களாகும். சகல பிள்ளைகளுக்கும் பாடசாலை கல்வியினை பெறுவதற்கு வாய்பளிக்கும் எண்ணக்கருவே உட்படுத்தல் கல்வியாகும். அது ஆசிரியர்களை கற்றலுக்கான தகவல்களை மட்டும் வழங்குபவராக மட்டுமன்றி வசதிகளை செய்து கொடுப்பவராகவும் மாற்றுகின்றது. உட்படுத்தல் தொடர்பான சகல கோட்பாடுகளும் குறைபாடுடைய அல்லது இடர்படுகின்ற பிள்ளைகள் விஷேட வகுப்புக்களில் இடப்படத் தேவையில்லை எனவும் கற்போர் சகலரும் ஒத்த வயதுக் குழுவினர் என்ற அடிப்படையில் ஒரே பாடசாலையில் கல்விபெற வேண்டும் என்பதும் இதனால் கருதப்படுகின்றது.

பொதுவாக பாடசாலைத் தொகுதியில் கற்றலை மேம்படுத்துவதற்கு உதவி தேவை என்பது விஷேட கல்வி தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு விடயமாகும். "உட்படுத்தல்" என்னும் பதமானது சனநாயகக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளையும் நோக்கங்களையும் கொண்டதாக கருதப்படுகின்றது என இம்மானுவேல் (1998) கருதுகின்றார். இந்த சிந்தனையையே 1994ல் ஸ்பெயின் நாட்டில் சொலமன்கா நகரில் கூடிய மகாநாட்டில் உட்படுத்தல் கல்விக்கான கல்விக் கொள்கையாக ஏற்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. இதன் பின்னர் விஷேட தேவையைக் கொண்ட பிள்ளைகட்கு கல்வி வழங்குவதற்காக உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலங்கையிலும் 1990ல் சிறுவர் உரிமைகள் சாசனத்தின் எல்லோருக்கும் கல்வி கொள்கைகளுக்கு அமைவாகவும் 1997ன் கட்டாயக் கல்வி சட்டதிட்டங்களுக்கு வகைகூறும் வகையிலும் ஊனமுடைய பிள்ளைகளின் அறிவு, திறன், மகப்பாங்குகளை வளர்ப்பதற்கு மிகவும் ஏற்ற வழி ஊனங்களற்ற பிள்ளைகளுடன் கல்வி பெறக் கூடிய சூழலை அப்பிள்ளைகளுக்கு உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஊனம் எந்த அளவு உக்கிரமானதாக இருந்த போதிலும் அவர்கட்கு உட்படுத்தல் கல்வியின் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டத்தினை பாடசாலை உருவாக்கும் நிலைகள் முகிழ்ந்து வருகின்றன. எனவே உட்படுத்தல் கல்விக்கான விளக்கங்கள் வரைவிலக்கணங்கள் வேறுபட்ட போதும் உட்படுத்தல் கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள் ஒத்த தன்மையை கொண்டனவாகவே உள்ளன.

உட்படுத்தல் கல்வி வேலைத்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர் விளங்கிக் கொள்ளல்.

சட்டரீதியான மற்றும் கொள்கை சார்ந்த நிபந்தனைகள் காரணமாக உருவாகியுள்ள வலிமை மிக்க காரணங்களினால் குறைபாடு மிக்க பிள்ளைகளை சாதாரண வகுப்பறையில் உட்படுத்தல் கல்விச் சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. அதாவது சாதாரண வகுப்பறையில் இருந்து இத்தகைய பிள்ளைகளை அப்புறப்படுத்த முடியாத சந்தர்ப்பங்கள் ஆசிரியர் எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ஆயினும் உட்படுத்தல் கல்வி வேலைத்திட்டத்தில் சகல பிள்ளைகளையும் பொதுவான கல்விக் கோலத்தினுள் உட்படுத்தி குறைபாடு கொண்ட பிள்ளைகளின் பல்வேறுபட்ட தேவைகளை இனங்கண்டு அதற்கான வேலைத் திட்டத்தினை ஆசிரியர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

முன்னர் குறைபாடுடைய பிள்ளைகள் குறைபாடுகளற்ற பிள்ளைகளைக் கொண்ட பொதுவான வகுப்பறைகளில் பிள்ளைகளுடன் இடைத்தொடர்பு கொள்ள வரையறைக்குட்பட்ட வகையிலேயே வாய்ப்புக்கள் கிடைத்தன. எனினும் தற்போது உட்படுத்தல் மூலம் குறைபாடுடைய பிள்ளைகளின் பல்வேறு மானுடப் பண்புகள் மற்றும் அங்கீகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளும் பணிகளை விருத்தி செய்யும் வாய்ப்புக்கள் கிடைக்கும் இப் பிள்ளைகள் உட்படுத்தல் வகுப்பறையின் வேறுபாடுகளை நன்கு விளங்கிக் கொண்டு மேலும் மேலும் போசிப்புப் பெறுவர். சகல பிள்ளைகளிடமும் ஆற்றல்கள் காணப்படுகின்றன என்பதினை பிள்ளைகள் அனைவரும் அறிவர். அந்த இருவரும் அச்சாக ஒத்தவரல்ல என்பதினை விளங்குவார். உட்படுத்தலானது பிள்ளைகளுக்கு குறைபாடுகள் தொடர்பாகவும் விளக்க மளிக்கின்றது. சாதாரணமாக குறைபாடுகள் உள்ளோர் எனக் கருதப்படுவர்களிடத்தே பல் ஆற்றல்கள் காணப்படுகின்றன என்பதினை புரிவதுடன் ஆட்களிடத்தே வேறுபாடுகளை விட ஒத்த பண்புகளே பெருமளவில் காணப்படுகின்றன என்பதினையும், குறைபாடுகளையோ, ஊனங்களையோ கவனத்தில் கொள்ளாது புறக்கணித்து விடுவதற்குச் சந்தர்ப்பங்கள் உட்படுத்தல் கல்வியாள் எழும் பயன்களாகும் என்பதினையும் அறிவர். மேலும் ஊனங்களும் குறைபாடுகளும் ஒருவரின் அடிப்படைத் தேவைகளை மறுப்பதற்கு காரணமாக மாட்டாது என்பதினையும் அறிந்து கொள்வர். "சகல பிள்ளைகளும் பிள்ளைகளே" என்ற எண்ணத்தினை ஆசிரியர் மனதிலிருத்தி செயற்பட வேண்டும்.

பல்வேறு தேவையுடைய மாணவர்களிடையே இடைத்தொடர்பு கொண்டு கற்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதே உட்படுத்தல் கல்வியின் மிக அனுகூலமான நிலையாகும். மேலும் ஊனமுடைய பிள்ளைகள் அவர்களது நண்பர்களுடன் கூட்டுச் சேர்வதினால் விருப்புடன் பாடசாலைக்கு வருவதற்கும் சமூகத்துடன் ஒன்றினைவதற்கும் துண்டப்படுவர். இதனால் நாட்டின் அபிவிருத்தியின் போது கவனத்தில் கொள்ளத்தக்க பிரதான இலக்குகளில் ஒன்று உட்படுத்தல் கல்வியாகும்.

எனவே ஆசிரியரும் வேறு வாண்மையாளர்களும் உட்படுத்தல் கல்வியில் பங்களிப்புச் செய்யும் போது இத் தத்துவம் சார்ந்த கோட்பாடுகளில் போதிய விளக்கம் பெற்றிருக்க வேண்டும்.

குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு எப்போதும் பல்வேறு வகைப்பட்ட உதவிச் சேவைகள் தேவை என்பது மறுக்க முடியாது. கல்வித்துறை சார்ந்த பணிப்பாளர்கள் தொடக்கம் பாடசாலை, சமூகம், பெற்றோர் மற்றும் கல்வியுடன் தொடர்பு கொள்ளும் சகல சேவைகளையும் வழங்குவோர் ஆகியோர் இது குறித்து பூரண விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். ஏன்னெனில் இது எம்மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு தத்துவமாக அமைகின்றது.

இத் தத்துவம் சார்ந்த கோட்பாடுகள் சிலவற்றை பின்வருமாறு விவரணப்படுத்தலாம்.

- சகல பிள்ளைகளுக்கும் கூட்டாக கற்கும் உரிமை உண்டு.
- பிள்ளைகளின் குறைபாடு மற்றும் கற்றல் இடர்பாடு காரணமாக அவர்களை வகுப்பறையில் இருந்து வெளியேற்றும் வகையில் செயற்படவோ, குறைத்து மதிப்பிடவோ கூடாது.
- அவ்வாறாக மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் பிறிதொருவரிடமிருந்து பாதுகாப்பு பெற ஆவண செய்யப்படுவதுடன் அவர்கள் கூடியிருக்கவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.
- பாடசாலை செல்லும் பருவத்தில் பிள்ளைகளை வகைப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நியமமான காரணம் எதுவும் கிடையாது.
- கல்விச் செயற்பாடுகளில் பொறுப்புடையோர் உட்படுத்தலின் அடிப்படை அம்சங்கள் கற்போர் சகலருக்கும் கிடைக்க வழிசமைக்க வேண்டும்.
- ஆரம்பம், இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பாக நடைமுறைப் படுத்தப்படும் கல்விக் கொள்கைகள், கல்வி மறுசீரமைப்பு பிரேரணைகள், சட்ட ரீதியான வழிமுறைகள் போன்ற அனைத்தின் போதும் மாற்று வலு கொண்ட பிள்ளைகளுக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் வளர்ந்தோருக்கும் சமவாய்ப்பு வழங்கும் கோட்பாட்டினை நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். மாற்று வலு கொண்ட பிள்ளைக்கு அண்மையிலுள்ள பாடசாலையில் கல்வி பெறுவதற்காக சாதாரண தேசிய கல்விக் கொள்கைகளே நிபந்தனைகளாக அடக்கப்படல் வேண்டும்.

அத்துடன் Gershil 1998, Equal opportunities and special Educational needs நூலில் கூறியது போல் அந்தப் பிள்ளையையும் யாதேனும் வகையில் வகைப்படுத்தவோ வழிகோலத்தக்க சமமின்மைகளை தோற்று விக்கத்தக்க சாதி, மத, குல, சமய, சமூக, விருப்பு, ஆற்றல், ஊனம் போன்ற வேறுபாடுகளை கருத்தில் கொள்வதினை முற்றாக தவிர்த்தல் வேண்டும்.

**முடிவுரை**

சமூகத்தின் சகலரையும் பொதுமைப்படுத்துவதற்குரிய இவ் வெண்ணக்கருவை கவனத்தில் கொள்ளும் போது அது ஒரு பாரிய அறை கூவலாகத் தோன்றுகின்றது. கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையே இடைவெளிகளும் காணப்படுகின்றன. மாற்று வலு கொண்ட பிள்ளைகளின் உட்படுத்தல் கல்வி தொடர்பாக ஒத்துழைப்பு நேர் மனப்பாங்கு கொண்டோரிடையே கூட கல்வித்தத்துவம் தொடர்பான அபிப்பிராய பேதங்களுண்டு.

**உதாரணமாக:-** பிள்ளைகளின் பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரிடையே காணப்படுகின்றது. எதுவாக இருந்த போதும் பொதுமைப்படுத்தும் நோக்குடன் முன்வைக்கப்பட்ட உட்படுத்தலை சாதாரண பாடசாலைகளில் அனைவரும் கல்வி கற்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற சிந்தனை சமூகத்தின் சகலருக்கான சக வாழ்விற்கான அடிப்படைத்தத்துவம்.

மாற்று வலு கொண்ட பிள்ளைகளுக்கு உட்படுத்தல் கல்வியின் பின்னணியில் கற்பித்தல் என்பது தனியொருவரால் ஆற்ற முடியாத பன்முகப்பட்ட (Multi Faceted) ஒரு பணியாகும். ஒரே நோக்கத்தின் பால் திசைமுகப்படுத்தப் பட்ட பல்வேறு வாண்மையாளரை கொண்ட ஒரு அணியினராலே இப் பணியினை நிறைவு செய்ய முடியும் என்பதினையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும். கல்வித்துறை சார் பணியினருடன் அவ்வப் போது தொழில் சார் சிகிச்சையாளர் (Occupational Therapist) உடற்றொழிலியலாளர் (Physic Therapist) வெறும் பேச்சு, மொழி போன்றவற்றுடன் தொடர்புடைய சிகிச்சையாளர்களின் நல்லிணக்கத்துடனே உட்படுத்தற் கல்வி சாத்தியமாகும். மாற்று வலுவுள்ள பிள்ளைகளின் ஊனங்கள் மற்றும் தேவைகள் என்பனவற்றுக்கமைய சிறப்பான மற்றும் குறைபாடுகளை நிவர்த்திக்கத் தக்க ஆற்றல் கொண்ட வாண்மைக் குழுவின் துணையுடனே வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். மேலும் மாற்று வலுக் கொண்ட பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த செயற்பாடுகளை (Practice) வழங்குவதினுடாகவே முன்னேற்றம் ஏற்படும்.

மரபுரீதியான, பாரம்பரியமான பொதுவான கல்வியினை கணிசமான ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் வழங்கிவரும் சூழ்நிலையில் பிள்ளைகளுக்கு உட்படுத்தல் கல்வியினை வழங்குவதானது பாரம்பரிய மாதிரியில் இடர்பாடானது.

உதாரணமாக:- ஒரு மாணவனுக்காக பேச்சு சிகிச்சைக்காக பிணியாய்வு மாதிரியில் (Clinical Model) சிகிச்சை அளிக்க வேண்டியிருப்பின் பொதுவான வகுப்பறையில் ஒரு குறித்த மாணவருக்கு வேண்டிய பிறிதொரு சிகிச்சையை ஏனைய மாணவரைக் கொண்ட வகுப்பறையில் வழங்குவது என்பது மேற்கொள்ள முடியாத கருமமாகவே கருதப்படுகின்றது.

விஷேட கல்வியின் புதிய சிந்தனைகள் பயனளிக்க வேண்டுமாயின் பாரம்பரியமான இசைவுகள், மற்றும் மனப்பாங்குகளில் மாற்றங்கள்ஏற்பட வேண்டும். அவ்வாறு மாற்றங்கள் ஏற்பட ஒரளவு காலம் தேவை என்பது உண்மையாகும்.

இவ்வுலகில் பிறக்கும் மாற்று வலுவுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் தன்னம்பிகையுடனும் சமூகத்தில் துடிப்பான ஒர் அங்கத்தவராக செயற்பட்டு முழு நிறைவான வாழ்கையை வாழ்வதற்கு உரிமையுண்டு என்பதினை எவரும் மறுக்க முடியாது.

பல்வேறு உடல், உள, சூழல் காரணங்களால் சில பிள்ளைகள் மாற்று வலுவுள்ளோர் என்னும் நிலைக்கு ஆளாக இடமுண்டு. இவ்வாறான ஊனமுடையோர் எதிர் நோக்கும் பிரதான தடை அவ்வாறான ஊனங்களற்றோர் அவர்கள் தொடர்பாக கொண்டுள்ள மனப்பாங்குகளாகும். முதலில் இவ்வாறன மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். ஊனங்களைக் கொண்டோரும் மனிதராவார். மனிதர் ஒவ்வொருவரும் சிறப்பான மனிதப் பிறவிகளாவர். அவர்களால் சில பணிகளை ஆற்ற முடியாது என்றவாறான முடிவுகளை எடுக்காது மனிதத்துடன் நோக்க வேண்டியது அவசியமாகும். எனவே உட்படுத்தல் சமூகமொன்றினை நோக்கிச் செல்லும் இத் தருணத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்கு ஒன்றுபட்டு நிற்பது அனைவரதும் பொறுப்பாகும்.

"நீங்கள் எம்மை ஊனமுடையோர் எனப் பெயர் சுட்டி வகைப்படுத்தும் போது வாழ்கை கடினமானதாக அமைகின்றது. நீங்கள் மற்றவர்களால் ஆளப்படும் ஒரு உலகில் அடைக்கப்பட்டு இருக்கின்றீர்கள் சீரான உதவியும், பயிற்சியும் கிடைத்தால் எமது ஆற்றலை நாம் வெளிப்படுத்த முடியும்."

---

மனிதரிடத்துச் சில மனவெழுச்சிகள் வலிதானகச் செயற்படும். அவர்களின் பொருளாதார பண்பாட்டுச் சூழல், உடலியற் காரணிகள், உளவியற் கவிநிலை முதலியவை சில வகையான மனவெழுச்சிகளை அவர்களின் வாழ்க்கையில் வலிதான மனவெழுச்சிகளாக்கி விடுகின்றன. வலிதாகியமைந்த மனவெழுச்சிகள் நித்தியமான தோற்றபாடுகள் அல்ல. அவை மாற்றியமைக்கப்படலாம். மேற்கூறிய நிச்சயிப்பு வலுக்களை மாற்றியமைப்பதன் வாயிலாக மனவெழுச்சிப் பாங்குகளை மாற்றியமைக்க முடியும். அவற்றின் வாயிலாக ஒருவரது ஆளுமையில் சிறப்பிடம் பெறும் சகிப்புத் தன்மையைக் கட்டியெழுப்ப முடியும். சகிப்புத் தன்மை "உளநலக் காப்புறுதி" என்று கூறப்படும். வாழ்க்கையின் தீங்குகளுக்கு எதிரான உளவியற் பாதுகாப்பாகவும் அது அமையும்.

(நன்றி: முனைவர். சபா.ஜெயராசா, 'குழந்தை உளவியலும் கல்வியும்' பக்: 44-45)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைக் கலாசாரம்


**முனைவர். த. கலாமணி,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


**சிறப்புப் பார்வை**

பாடசாலை என்பது ஒரு கட்டடம் அன்று: அதற்கும் மேலாக அது ஆசிரியர்களதும் மாணவர்களதும் கற்றற் செயற்பாட்டை செப்பமாய் உருவமைக்கும் ஒரு சமூக கலாசாரமும் ஆகும்.

## பாடசாலைக் கலாசாரமும் நிறுவனக் கவிவு நிலையும்: ஒரு முன்னோட்டம்.

பாடசாலை என்பது ஒரு கட்டடம் அன்று: அதற்கும மேலாக அது ஆசிரியர்களதும் மாணவர்களதும் கற்றற் செயற்பாட்டை செப்பமாய் உருவமைக்கும் ஒரு சமூக கலாசாரமும் ஆகும். இந்த உண்மை பல சந்தர்ப்பங்களில் கவனத்திற் கொள்ளப்படாமையினாலேயே தேசிய ரீதியான கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பாடசாலைகளில் அடிப்படை மாற்றங்கள் எவற்றையும் ஏற்படுத்தாதிருக்கின்றன. பாடசாலை பொருத்தமான காலாசாரப்பண்பைக் கொண்டிருக்குமெனின், அங்கு உவப்பான கவிவு நிலையும் (Climate) காணப்படும். பாடசாலைக் கவிவு நிலை, பாடசாலைக் கலாசாரம் என்பன குறித்த அம்சங்களை நன்கு விளங்கிக்கொண்டு பாடசாலைத் தலைமைத்துவம் செயலாற்றும் போதே நிறுவன இலக்குகளைப் பாடசாலை எய்த முடியும்.

### பாடசாலைக் கவிவு நிலை

ஒரு பாடசாலைக் கட்டடத்தில் நிலவும் முழுச்சுற்றுச் சூழலின் இயல்புகளே பாடசாலையின் கவிவு நிலை என பொதுவாக வரைவிலக்கணம் கூறப்படும். ஒரு நிறுவனத்திலுள்ள முழுச்சுற்றுச் சூழலைச்சுட்டும் நிறுவனக் கவிவு நிலையானது நான்கு பரிமாணங்களைக் கொண்டது.

*அவையாவன:*

*உயிர் வாழ்க்கைச் சூழல் (Ecology)*

*சமூகச் சூழல் (Milieu)*

*சமூகத்தொகுதி (Social System)*

*கலாசாரம் (Culture)*

**உயிர் வாழ்க்கைச் சூழல்** என்பது நிறுவனத்திலுள்ள பௌதிகக காரணிகளையும் சாதன வசதிகளையும் குறிப்பிடுவதாகும். உதாரணமாக, பாடசாலைக் கட்டடங்களின் விஸ்தீரணம், வடிவமைப்பு, வசதிகள், வயது, நிலைமைகள் போன்றவற்றை உயிர்வாழ்க்கைச் சூழல் உள்ளடக்கும். அத்தோடு, நிறுவனத்திலுள்ளோர் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தையும் உயிர்வாழ்க்கைச் சூழல் என்பது குறிப்பிடுகின்றது. நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேசைகள், கதிரைகள், கரும்பலகைகள் போன்றனவும் பாடசாலைத் தொழில் நுட்பத்திற்கான உதாரணங்களாகும்.

சமூகச் சூழல என்பது நிறுவனத்தின் சமூகப் பரிமாணம் ஆகும். ஒரு நிறுவனத்திலுள்ள மக்களோடு தொடர்புபடுகின்ற சகல விடயங்களும் சமூகச்சூழல் என்பதனுள் அடங்கும். உதாரணமாக, ஒரு நிறுவனத்திலுள்ளோர் எத்தனைபேர், அவர்கள் எவ்வாறானவர்கள் என்பன போன்ற வினாக்களுக்கு விடையாக அமையும் அம்சங்கள் யாவும் நிறுவனத்திலுள்ளோருடன் தொடர்புபடுபவை ஆகும். சாகியம், இனம், ஆசிரியர் சம்பளப்படிநிலை, மாணவர்களின் சமூகப் பொருளாதார மட்டம், ஆசிரியர்களின் கல்வி மட்டம், பாடசாலையோடு சம்பந்தப்பட்ட மூத்தோர்களதும் மாணவர்களதும் ஒழுக்கமும் கட்டுப்பாடும், ஊக்கம், தொழிற்திருப்தி மட்டம் எனவும் நிறுவனத்திலுள்ளோரின் மற்றும் பல இயல்புகளும் நிறுவனத்தின் சமூகச் சூழலைப் பிரதிபலிப்பவை ஆகும்.

சமூகத் தொகுதி என்பது நிறுவனத்தின் ஒழுங்கமைப்புச் சார்ந்ததும் நிர்வாகம் சார்ந்ததுமான கட்டமைப்பைக் குறிப்பிடுவதாகும். உதாரணமாக, பாடசாலையொன்று எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது, அங்கு தீர்மானங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன. இத்தீர்மானங்களை மேற்கொள்பவர்கள் யார், பாடசாலையிலுள்ளோரிடையே காணப்படும் தொடர்பாடற் கோலங்கள் யாவை, எவ்வாறான குழு அமைப்புக்கள் உள்ளன என்பன போன்ற பல்வேறு விடயங்களும் சமூகத்தொகுதி என்பதில் உள்ளடங்குவன. எனவே சமூகத்தொகுதி என்பதை ஒழுங்கமைப்பு எனலாம்.

கலாசாரம் என்பது சமூகக் குழுவொன்றின் இயங்குநிலையைக் குறிப்பதாகும். அக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைத் தொகுதிகள், விழுமியங்கள், நடைமுறைகள், நியமங்கள் என்பன இதில் அடங்கும். இச் சமூகக் குழுவானது, செயற்பாடுகள் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது குறித்த பொதுவான சில எடுகோள்களின் அடிப்படையிலேயே இயங்கும். சாத்தியமானவை எவை சாத்தியமல்லாதவை எவை என கலாசாரமே வரையறை செய்வதால், குறித்த கலாசாரமொன்றைக் கொண்ட மக்கள் ஒரேவிதமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க முயல்வர்.

உயிர்வாழ்க்கைச் சூழல், சமூகச்சூழல், சமூகத்தொகுதி, கலாசாரம் ஆகிய நான்கு பரிமாணங்களும் ஒன்றோடொன்று இடைத்தொடர்புடையனவாய் இருப்பதோடு, நிறுவனக் கவிவு நிலையைத் தோற்றுவிப்பனவாயும் உள்ளன. பாடசாலைக் கவிவு நிலையை செப்பனிட்டு உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற முதன்மையான இச் சூழற்காரணிகளிடையே உள்ள தொடர்புகளைக் கீழேயுள்ள உரு காட்டுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கலாசாரம்

கலாசாரம் என்பது ஒரு சமூகக்குழுவின் இயக்கத்தைக் குறிக்கும் என்ற விரைவிலக்கணம் பாடசாலைக் கலாசாரத்துக்கும் பொருந்தும். பெரிய சமுதாயத்துள் சமூக மயமாக்கற் செயன் முறை இடம்பெறுவது போலவே, பாடசாலையிலும் மாணவர்களும் புதிய ஆசிரியர்களும் பாடசாலைச் சூழமைவுக்குப் பொருத்தப்பாடடையச் செய்யப்படுகின்றர். பாடசாலையின் பொதுவான நடைமுறைகளைப் பின்பற்றி நியமங்களையும் விழுமியங்களையும் பேணும் வகையில் பாடசாலைக் கலாசாரத்தை அவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

சில நிறுவனக் கலாசாரங்கள் மிகவும் வன்மையாகக் கட்டுப்பாடுகளை விதிப்பனவாக இருக்கும். இவை ஒரு தனிநோக்கத்தினாலும் பெருமளவுக்கு நியமமான நடைமுறைகளாலும் வழிநடத்தப்படுவனவாகவும் இருக்கும். ஆனால் பாடசாலைக் கலாசாரங்கள் தளர்வான பிணைப்புகளையுடைய தொகுதிகளாக விபரிக்கப்படும். பட்டும் படாததுமான தொடர்புகளை உடையவையும் அதிகம் விளங்கிக் கொள்ளப்பட முடியாதவையுமான தொகுதிகளே "தளர்வான பிணைப்புகளையுடைய தொகுதிகள்" எனப்படுகின்றன. பாடசாலைக் கலாசாரமும் ஒரு தளர்வான பிணைப்புடைய தொகுதியாக விபரிக்கப்படுவதற்கு ஆசிரியர்கள் தமது சகபாடிகளிலிருந்து ஓரளவேனும் தனிமைப்பட்டிருப்பதும் பகுதிக் காரணமாகின்றது. அத்தோடு, ஆசிரியர்கள் வெவ்வேறு அளவிலான பாடநிபுணத்துவத்தோடு கூடிய வாண்மையாளர்கள் என்பதும்கூட பாடசாலைக் கலாசாரத்தின் வேறுபட்ட தன்மைக்குக் காரணமாகும். எனவே ஆசிரியர்களின் நம்பிக்கைகளுக்கு முரணாக அமையக்கூடிய நிருவாக நடவடிக்கைகளைக் கட்டளையிடும் முறையிலோ அல்லது அதிகாரமுறையிலோ அதிகம் செயற்படுத்துவதோ அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவதோ கடினமானதாகும்.

பாடசாலைக் கலாசாரங்கள் தளர் பிணைப்புடைய தொகுதிகளாக விபரிக்கப்படுகின்றபோதிலும், எல்லாப் பாடசாலைகளினதும் கலாசாரம் இவ்வாறு இருப்பதாகக் கூறமுடியாது. சமுதாய எதிர்பாப்புக்கள், பாடசாலை அங்கத்தவர்களின் நம்பிக்கைகள், நிர்வாக நடைமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் பாடசாலைக்குப் பாடசாலை அவற்றின் கல்விசார் நடவடிக்கைகள் தனித்துவமின்மையாகவும் வேறுபட்டிருப்பதையும் நாம் காணலாம். துலக்கமாகத் தெரியக்கூடியதும் உயர் விழுமியங்களையும் நியமங்களையும் பேணுவதுமான கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலைத் தலைமைத்துவத்தின் வகிபாகம் அளிப்பரியது. ஆசிரியர்கள் ஒருவரோடொருவர் பேதமுற்று, ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலிருந்து, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு பிணைப்புடையவர்களாய் கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலைக்கு மாற்றுவதும் தலைமைத்துவத்தின் பொறுப்பேயாகும்.

முகாமைத்துவ கலாசாரம்

ஒரு பாடசாலை தனது இலக்குகளை உரியவாறு எய்துவதற்கு அப்பாடசாலையின் கலாசார அம்சங்கள் நன்கு கட்டியெழுப்பப்பட்டிருக்கவேண்டியது அவசியமாகும். பாடசாலையுடன் தொடர்புடைய சகல பணியாளர்களினதும் பணிகள், கடமைகள், உரிமைகள், சேவைகள் என்பன நன்கு வரையறை செய்யப்படும் வகையிலேயே அப்பாடசாலையின் கலாசார அம்சங்களும் அமைவதனால், பாடசாலையின் கலாசார விருத்திக்கு அதனை நிர்வகிக்கின்ற முகாமைத்துவ முறையின் கலாசாரமும் முக்கியத்துவ முறையின் கலாசாரமும் முக்கியமானது. பொதுவாக ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவ கலாசாரம் உயர்வாகப் பேணப்படுவதற்கு அங்கு பின்வரும் கலாசார அம்சங்கள் காணப்படவேண்டியது அவசியமாகும்.

1. நிறுவனமானது உரியவாறு ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்.
2. தலைமைத்துவமானது முதல் நிரை முகாமையாளர் என்ற நிலையில் முழுமையாக அதிகாரத்தை கொண்டிருப்பதுடன் நிறுவனத்தின் பருமனையொட்டி பொருத்தமான வகையிலே அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட்டிருத்தல்.
3. நிறுவனத்தில் அடங்கும் பணியாளர்கள் தம்மிடையே பொருத்தமான முறையிலே மேலிருந்து கீழ்நோக்கியும் கீழ்லிருந்து மேல்நோக்கியும் சமாந்தர நிலையிலும் தொடர்புகொள்ளக்கூடியதாக இருத்தல். அதாவது கருத்துக்களும் அனுபவங்களும் உரியவாறு பரிமாறப்படக்கூடியதாக இருத்தல்.
4. நிறுவனத்தில் அடங்கும் பணியாளர்கள் அனைவரும் தமது கடமைகளை சிறப்பாக ஆற்றும் வகையில் தம்மை அர்ப்பணிக்கும் நிலையில் காணப்படல்.
5. நிறுவனத்தில் அடங்கும் ஆளணியினர் தத்தமக்குரிய துறையிலே தொழில்விருத்தி பெறக்கூடியவாறு வழிவகைசெய்யப்பட்டிருத்தல்.

இந்த அம்சங்கள் ஒரு நிறுவனத்திலே எவ்வளவுக் எவ்வளவு சிறப்பாகப் பேணப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அங்கு முகாமைத்துவ கலாசாரம் உயர்வாகப் பேணப்படும். இவ்வாறு முகாமைத்துவ கலாசாரப்பண்பு நிறுவனத்தில் விருத்தியுறும் போது அந்நிறுவனம் தனக்கேயுரித்தான விழுமியங்களையும் நியமங்களையும் பெற்றுக்கொள்ளும். இந்நியமங்களும் விழுமியங்களும் உரியவாறு உருவாகும் போது இந்நிறுவனம் பற்றிய எண்ணக்கரு சமூகத்தில் விருத்தியடைவதுடன் அதன் சமூகப் பயன்பாட்டுத்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன்மையும் அதிகரிக்கமுடியும். இவற்றின் அடிப்படையிலே நிறுவனத்தின் பொதுவான எதிர்பார்ப்புகளும் அந்நிறுவனத்தில் அடங்கும் பணியாளர் கூட்டத்தின் பொதுவான எதிர்பார்ப்புகளும் பணியாளர் ஒவ்வொருவரினதும் தனியாள் எதிர்பார்ப்புகளும் ஒன்றிணைய முடியும்.

ஒரு நிறுவனத்திற் காணப்படும் மனப்பான்மை அல்லது ஒற்றுமை உணர்வு, பணியாளரின் தொழில் விருப்பும் தொழிற்திருப்தியும், பணியாளரின் தொழில்விருத்திக்கு உதவும் வழிவகைகள், நிறுவனம் பற்றிய சமூக மதிப்பீடு போன்றவை அந்நிறுவனத்தின் நியமங்கள் (Norms) ஆகவும் நிறுவனமானது முழுமையாக சமுதாய விருத்திக்குதவக்கூடியதாகவும் இருத்தல். நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் நற்பண்புகள் ஆகியன அதன் விழுமியங்கள் (Values) ஆகவும் கொள்ளப்படும்.

இவ்வகையில் நிறுவனம் ஒவ்வொன்றும் சமுதாய, கலாசார பிரதிபலிப்புக் களங்களாக அமையும்போது அவை நாட்டின் கலாசார விருத்திக்கும் உதவமுடியும். அதே வேளை நிறுவனங்களை நிர்வகிக்கின்ற யாப்புகள், விதிமுறைகள், பிரமாணங்கள், பணிப்புகள், சுற்றுநிருபங்கள், மரபுரீதியான கட்டுப்பாட்டு முறைகள் போன்றனவும் நிறுவனத்தின் கட்டமைப்புக்கு உதவுவதுடன் அதன் கலாசார விருத்திக்கும் உதவுவனவாய்க் கொள்ளலாம்.

எனவே பாடசாலை நிறுவனமும் அதன், இலக்குகளை ஒட்டியதாகவும் பணியாளரின் திருப்திகளை ஒட்டியதாகவும் செயற்படும் போதே அதன் கலாசார பண்பும் பேணப்படுகின்றதெனக் கொள்ளமுடியும். பாடசாலை என்பது ஒரு "புதுமை காண் உயிர்ப்புத் தொகுதி" ஆகும். பாடசாலையின் தொழிற்பாடு செயலூக்கமுடன் இயக்க முள்ளதாக இருத்தலையும் பொருத்தமான சமூக உறவுகளை கொண்டிருத்தலையும் "உயிர்ப்பு" என்ற பதம் குறித்து நிற்கின்றது. இதேபோல "புதுமைகாணல்" என்பது ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோரது பிரச்சினைகளையொட்டி ஏற்ற வழிமுறைகளையும் அணுகு முறைகளையும் கண்டறிதலைக் குறிக்கும். இவ்வாறாக, பாடசாலை என்பது ஒரு புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக இருத்தலால் பாடசாலையின் கலாசாரப் பண்புகள் புதுமைகாணலுக்கும் உயிர்ப்பு நிலைக்கும் வழிசெய்வதாக அமையவேண்டும்.

1980களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், இலங்கையின் பெரும்பாலான பாடசாலைகளில் பொருத்தமான கலாசாரப் பண்புகள் காணப்படவில்லை எனவும் இப்பாடசாலைகள் தமது இலக்குகள் பற்றியே அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தன. உயர்கலாசாரப் பண்புகள் பாடசாலைகளில் உருவாகாமைக்கு அங்கு முகாமைத்துவ கலாசாரமின்மையே முக்கிய காரணமாகவும் குறிப்பிடப்பட்டது. இதன் போறாக, அக்காலத்தில் வெளிவந்த கல்வி முகாமைத்துவ சீர்திருத்தங்கள் தொடர்பான அறிக்கைகள் பாடசாலைகளில் கலாசார விருத்தியை ஏற்படுத்தக்கூடிய முகாமைத்துவ அணுகு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தன.



## பாடசாலைக் கலாசாரத்தை செப்பனிடுவதற்கான பொறிமுறைகள்

ஒரு பாடசாலையில் பொதிந்துள்ள விழுமியங்களுடனும் நம்பிக்கைகளுடனும் பழக்கப்படுத்திக் கொள்வதனூடாகவும் பாடசாலைக் கலாசாரப் பண்பை புதிய திசைகளில் வடிவமைப்பதனூடாகவும் கலாசார மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக பாடசாலை முன்னேற்றத்தை பாடசாலைத் தலைவர்கள் ஏற்படுத்தலாம். ஆனாலும் விளங்கிக்கொள்ளல், பொறுமைபேணல், மனிதத்தொடர்பு பேணும் திறன்கள், தொடர்பாடல் செய்யுமாற்றல் போன்றவற்றை வேண்டிநிற்கும் நீண்ட காலச்செயற்பாடு இதுவாகும். கலாசாரத்தை மாற்றுவதென்பது உள்ளம், உடல், ஆன்மா என்பவற்றின் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளலை உள்ளடக்குவதோடு பின்வரும் செயற்பாடுகளையும் உள்ளடக்கும்.

- பாடசாலையில் ஏற்கனவேயுள்ள கலாசாரத்தை அறிந்து கொள்ளல்.
- தொடர்பாடலுக்கான இணைப்புகளை நிறுவுதல்.
- ஆசிரியர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- புதுப்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- தலைமைத்துவப்பண்பை அநுட்டானம் செய்தல்.
- விரும்பப்படும் நடத்தைகளை உருவாக்கி முன்னுதாரணமாக விளங்கல்.
- பொருத்தமான பணியாளர்களை பணிகளுக்கமர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடசாலையில் ஏற்கனவே நிலவும் கலாசாரத்தை அறிந்துகொள்ளல் என்பது அப்பாடசாலையின் நாயகர்களாகவும் நாயகியர்களாகவும் விளங்கியவர்கள் சார்பாகவும் பாடசாலைக்குப் பெருமைசேர்க்கும் அம்சங்கள் சார்பாகவும் பாடசாலையின் சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்கள், கலாசார வலையமைப்புக்கள் என்பன சார்பாகவும் பாடசாலைக் கலாசாரத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ளலாகும். பாடசாலைக்காற்றிய கருமங்களாலும் பங்களிப்புகளாலும் சமூகத்தில் பாடசாலையின் பெறுமதியை எடுத்துக்காட்டியதன் காரணமாக மதிப்பளிக்கப்படுவோரே பாடசாலையின் நாயகர்களும் நாயகியர்களுமாவார். ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நடத்தைக்கான எல்லைகளை வகுக்கும் பாடசாலை வாழ்க்கையின் நடைமுறை ஒழுங்குகளே பாடசாலையின் சடங்குகளாகும். அதே வேளை பாடசாலையில் பெறுமதி அளிக்கப்படுபவற்றை பாடசாலை விழாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. பாடசாலையின் கலாசாரத்தை செப்பனிடுதலிலும் வியாக்கியானம் செய்தலிலும் ஆதரவளித்தலிலும் பல்வேறு தரப்பினரின் வகிபாகங்களை அறிந்துகொள்ளல் மூலமே கலாசார வலையமைப்பை விளங்கிக் கொள்ளலாம். பாடசாலை கலாசாரத்தையும் முக்கியஸ்தர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு, பாடசாலையின் செயற்கருமங்கள் செய்யப்படும் முறைகள் குறித்து அவை ஏன் அவ்வாறு செய்யப்படுகின்றன எனவும் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளின் பின்னணியாக அமையும் அர்த்தங்கள் யாவையெனவும் வினாக்களையெழுப்பி விடைகாணவேண்டும். இதற்காக பாடசாலைகுறித்த "கதைகளைச்" சொல்லக்கூடியவர்களுடன் பாடசாலை நிகழ்வுகளுக்கு விளக்கம் கூறி அக்காட்சியை வழங்கக்கூடிய முதன்மையாளர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்து பாடசாலையிலுள்ள முறை சார்ந்ததும் முறைசாராததுமான தொடர்பாடல் தொகுதியினூடாக நடைமுறையிலுள்ள கலாசாரத்தின் யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு, புதிய கலாசார மாற்றங்களை வடிவமைக்க முடியும். முறைசாராக் கலந்துரையாடல்களினூடாகவும் பின்னூட்டல் நேர்முகங்களினூடாகவும் அபிப்பிராயப் பெட்டிகளில் சேகரிக்கப்படும் கருத்துகளினூடாகவும் பாடசாலைக் கலாசாரத்தை நாம் பிடித்துப் பார்க்கமுடியும். நிறுவனத்தின் சகலமட்டங்களிலுள்ள மக்களும் பரந்த சமுதாயத்துடன் தொடர்பாடலுக்கான இணைப்புகளை வழங்கக்கூடியவர்களாக இருக்கலாம் என்பதை பாடசாலைத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பாடசாலைக் கலாசாரத்தை செப்பனிடுவதற்காக மேற்கொள்ளப்படும் மாற்றம் ஆசிரியர்களின் சமூக, உள நலங்களைப் பாதிக்காது பார்த்துக்கொள்ளவேண்டியதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். இவ்வகையில், ஆசிரியர் தேவைகளை அறிந்து, பாடசாலையின் சாதனைகளை ஆவணப்படுத்தி, அந்த ஆவணங்களில் அச்சாதனைகளுக்கான ஆசிரியர்களின் பங்களிப்புகளையும் குறித்துக்கொள்ளவேண்டும். சாதனையாளர்களாக ஆசிரியர்களை விளங்கச் செய்வதற்கு வேண்டிய வளங்களையும் ஊக்கல்களையும் அவர்களுக்கு வழங்கி, கல்விசார் நிபுணத்துவத்தை வளர்த்துக்கொள்வதற்கும் பாடசாலைத் தலைமைத்துவம் உதவவேண்டும்.

இன்று ஒரு பாடசாலையானது கற்றுக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயமாக உருவகிக்கப்படுகிறது. இவ்வாறு, கற்றுக்கொண்டிருக்கும் சமுதாயமாக பாடசாலை உருவாகுவதற்கு, பாடசாலையிலுள்ள ஒவ்வொருவரும் கற்றலில் நாட்டமுள்ளோராகவும் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்போராகவும் விளங்கவேண்டும். ஆசிரியர்களின் நலனும் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் மாணவர்களின் கற்றலிலும் நன்மை விளைவிக்கும். ஒவ்வொருவரும் தம்மைப் புதுப்பித்தலுக்கும் சிந்தனைத் தெறிப்புச் செய்தலுக்கும் வழிசெய்யக்கூடிய வகையில் வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களைப் பாடசாலைத் தலைமைத்துவம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். புதிய வகுப்புகளுக்குக் கற்பித்தல், புதிய நெறிகளில் கற்பித்தல், ஏனைய ஆசிரியர்களுக்குக் கற்பித்தல், பணியாளர் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல், தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெளியாரிடமிருந்து நிதிபெறல் போன்ற சவாலுக்குரிய கருமங்களில் ஆசிரியர்களை ஈடுபடுத்தும் போது, ஆசிரியர்கள் தம்மைப் புதுப்பித்தலுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

சுயமதிப்பீட்டுக்கும் புதுமைகாணலுக்கும் வழிகாணக்கூடிய ஓர் உயர்கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல் தலைமைத்துவத்தின் வகிபாகமாகும். பாடசாலை அதிபரே ஒரு முதன்மையான கற்போனாக விளங்கித்தானே வழிகாட்டக்கூடிய ஒரு கற்றுக்கொண்டிருக்கும் சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளலாம். பாடசாலையின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும் அதிபர் ஒருவர் தனது பாடசாலையின் நடைமுறை விவகாரங்களைப் பரிசீலித்து, அவ்விவகாரங்கள் குறித்து, ஆசிரியர் குழாமின் உதவியுடன், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். துணிகரமாகச் செயலில் இறங்குதல், பிறரின் கருத்துக்களைச் செவிமடுத்தல், தவறுகள் ஏற்படலாம் என்பதை ஏற்றுக்கொள்ளல், ஒப்படைக்கப்பட்ட பணிகளை குறித்த பணியாளர்களே நிறைவேற்றுவர் என பணியாளர்களிடம் நம்பிக்கை கொள்ளல், நகைச்சுவை உணர்வுடையவராயிருத்தல், ஏனையோரை வலுவூட்டி இயங்கச் செய்தல், தொடர்ச்சியான முன்னேற்றத்தில் நம்பிக்கைகொள்ளல் போன்ற பல்வேறு தலைமைத்துவப் பண்புகளையும் பாடசா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லை அதிபர்கள் அநுட்டானம் செய்து கொள்வதனூடாக தமது பணியாளர்களிடமும் தலைமைத்துவப் பண்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

விரும்பப்படும் நடத்தைகளை உருவாக்கி முன்னுதாரணமாக அதிபர் ஒருவர் விளங்க வேண்டுமாயின், பாடசாலை குறித்த சிறந்த தூரநோக்கை அப்பாடசாலை கொண்டிருக்கச் செய்வதோ, அத்தூரநோக்கின் வழியே பிறரையும் திசைப்படுத்துபவராகவும் விளங்க வேண்டும். ஒரு பாடசாலையின் தூரநோக்க ஆசிரியர்கள் தமது சக்தியை மாணவர்களுடனும் பெற்றோருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை உள்ளடக்குமாயின், அதிபரும் தனது சக்தியை ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும். பாடசாலையின் தூரநோக்கில் சகலரும் கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்பது உள்ளடக்கப்பட்டிருக்குமாயின், மாணவர்கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை முதியோர் கல்விக்கும் கொடுக்கவேண்டும்.

பாடசாலையின் குறித்த பணிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தும் போது பொருத்தமான பணிகளில் பொருத்தமான ஆசிரியர்களை அமர்த்துவதும் முக்கியமானது.

ஆசிரியர்களின் ஆற்றல்களையும் இயல்புகளையும் அறிந்து கொண்டு, அவர்களை குறித்த பணிகளில் அமர்த்தப்பட்டோர் பிறருடன் இணைந்து செயற்படக் கூடியவராகவும், ஆக்கத்திறனுடையவராகவும் தலைமை தாங்கி வழிநடத்தக் கூடியவராகவும் உள்ளனரா எனப் பரிசீலிப்பதும் கூட அதிபருக்கான ஒரு முக்கிய கடமைப் பொறுப்பாகும்.

தொகுத்துநோக்கும் போது, பாடசாலைக் கலாசாரமான அப்பாடசாலையில் எவ்வகையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பதிலும் அவை எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது தெளிவாகின்றது. இவ்வகையில் பாடசாலைத் தலைவர்களாக விளங்குகின்ற அதிபர்கள் தமது பாடசாலைகளில் வியாபித்திருக்கின்ற கலாசாரப் பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களிடையேயான இணக்கக் குறைவு, ஆசிரியர்கள் தனிமைப்பட்டிருத்தல், ஒன்றாக வேலை செய்வோம் என்ற வகையில் சக ஆசிரியர்களைத் தமது கூட்டாளிகளாக ஏற்கப் பின்நிற்றல் ஆகிய பாடசாலை முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்கும் தடைகளையும் கவனத்திற் கொண்டு, பாடசாலைத் தலைவர்களாகிய தமது பொறுப்பு என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஏற்கெனவே உள்ள கலாசாரத்தை விளங்கிக்கொள்வதன் மூலமும் கலாசார இணைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசிரியர் தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலமும், பாடசாலையின் தூரநோக்கை, தம்மை முன்னுதாரணப்படுத்தி தெளிவுபடுத்துவதனூடாகவும் பாடசாலையின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நோக்கியதாகப் பாடசாலைக் கலாசாரத்தை அதிபர்கள் செப்பனிடலாம். இவ்வாறு செப்பனிடப்பட்ட உயர்வான பாடசாலைக் கலாசாரம் அப்பாடசாலையின் உயர் கல்வி நிலைக்கு வழிகோலும்.

---

கணிதம் என்பது அறிவு, திறன்கள் என்பவற்றின் திரட்டு என்பதற்கும் மேலாக, அது ஒரு படைப்பாக்கச் செயல்நடவடிக்கையுமாகும். தொகை மதிப்பீடு, அளவீடு படம் மூலமான சித்திரிப்பு, வரைவு மூலமான விபரிப்பு, பிரச்சினை விடுத்தல் தீர்மானம் மேற்கொள்ளல் என்பன போன்ற பல்வேறு தொழிற்பாடுகளும் இன்று கணிதச் செயற்பாடுகளாக அமைந்து, 'கணக்கிடுதல் மட்டும்தான் கணிதம்' என்ற பழைமைவாதம்ச் சிந்தனையிலிருந்து கணிதத்தை மீட்டெடுத்துள்ளன. சமூக, பௌதிகத் தோற்றபாடுகளை உற்று நோக்குதல், படிமவார்ப்புச் செய்தல், பரிசீலனை செய்தல், கோலங்களையும் தொடர்புகளையும் ஒப்பிடல் என இன்னோரன்ன பல்வேறு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக நாளாந்த வாழ்க்கையின் சகல மட்டங்களிலுமான மனித நடவடிக்கைகளுடன் கணிதம் தொடர்புபட்டது என்ற எண்ணக்கருவாக்கம் இன்று முதன்மை பெற்று 'அனைவர்க்கும் கணிதம்' என்ற சிந்தனைக்கு வலுச்சேர்ப்பதாக உள்ளது.

(நன்றி: முனைவர். த. கலாமணி, 'கணிதக் கல்வி சில உளவியல் அடிப்படைகள்' அகவிழி - ஆனி - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அதிபரின் டயரியிலிருந்து..



நிஷா.....

புதிய பரிணாமத்துடன் கையில் தவழும் செப்டம்பர் 2008 அகவிழியை ஒரு குழந்தையை கொஞ்சும் வாஞ்சையுடன் கையில் எடுக்கிறேன். இத்தனை நாளாய் பார்த்த அகவிழியை ஒதுக்கி வைத்து விட்டு செப்டம்பர் மாத அகவிழி கம்பீரமாய் எதிர்காலச் சிந்தனைச் சிற்பியின் புகைப்படத்தை அட்டைப்படமாய் தாங்கியவாறு..............................

கட்டுரைத் தலைப்புகளில் கண்கள் மேய்கின்றன "பண்பாடும் சீர்மியமும்" ஆசிரியர் பக்கத்திற்கு அடுத்ததாய் முதலில் பார்க்க வேண்டிய தலைப்பை மனசு தெரிந்தெடுத்துக் கொள்கின்றது. முன்னாள் பேராசிரியர் சபா ஜெயராசா (கல்வியல் துறை யாழ் பல்கலைக் கழகம்) "குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களின் கூட்டு மொத்த திரட்டலாகப்பண்பாடு அமைகின்றது. அதனை அடியொற்றியே மனித நடத்தைகள் நெறிப்படுத்தப்படுகின்றன."

என் தலையின் நினைவு மரத்தில் இருந்த பழுத்து காய்ந்திருந்த ஒரு குரும்பை விழுகிறது. 2000 Jun 08ஆந் திகதி எம் சிற்றூரில் இருந்து சில குடும்பங்களைத் தவிர்ந்து அனைவரும் இனக்கலவரத்தின் காரணமாக உயிரை மாத்திரம் கையில் பிடித்துக் கொண்டு வெளியேறிய நேரம். அகதிகளாய்தஞ்சம் புகுந்திருந்த அகதி முகாமில் கூடப்பாதுகாப்பற்ற நிலையைக்கண்டு பதறிப் போய் இருந்த வேளை பாதுகாப்புப்படையும் பயங்கரவாதிகளாய்ப் பட்டம் சூட்டப்பட்டவர்களும் அகதிகளைப் பணயக் கைதிகளாய் வைத்து ஆடிய ஆட்டத்தில் ஒரு நடுத்தரப் பெண்ணின் இரு கால்களும் துண்டிக்கப்பட்டு துடிதுடித்ததைக் கண்டும் வேறு போக்கிடமற்று நடப்பது நடக்கட்டுமென்று அக்கல்லூரியிலே தஞ்சம் புகுந்தனர் பிரதேச வாசிகள்.

எமது கல்லூரியில் சுமார் 15 குடும்பங்கள் தஞ்சம் புகுந்திருந்தன. பீதி யொழிந்தாலும், உடலோடு ஒட்டிய உயிரே உடமையாய் விழிகளில் ஏக்கம் மிஞ்சிய பார்வையுடன் சிறுவர்களும், பெண்களும், ஆண்களுமாய் கல்லூரியை உபயோகித்துக் கொண்டிருந்த வேளை எனது குடும்பமும் அகதிகளோடு அகதியாய்....ஒரு வகுப்பறைக்குள் முடங்கிக் கொள்கின்றது.

வெள்ளைப்புறாக்கள் சிறகடித்த அந்தக்கட்டிடங்களின் கதிரைகளையும் மேசைகளையும், அழுகையும் அவலமும் நிரப்பிக் கொண்டிருந்தன. நூலகம், மனையியல் அறை, விஞ்ஞானக் கூடம், காரியாலய அறைகளை, நிரப்பிக் கொண்டிருந்த குடும்பங்கள் அங்கிருந்த பொருட்களையும் தமது சொந்தப் பொருட்களாக பாவனை செய்ததைப் பார்க்க நெஞ்சு கனத்தது எனக்கு.

நூலக அலுமாரியில் இத்தனை நாள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் சிறுவர்களின் படம் பார்க்கும் பொருளாகிக் கிடந்தன. பிள்ளைகளின் பிறந்த நாட்களிலும், வகுப்பில் 01ஆம் இடம் பெறுபவர்களும், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும், தங்களின் வீட்டு விஷேட தினங்களிலும் மாணவர்கள் பரிசளித்த புத்தகங்களுடன் நலன் விரும்பிகள் ஒவ்வொருவரிடமும் சேர்த்தெடுத்த புத்தகங்களும் தேடுவாரற்று சிதறிக்கிடந்தன.

என்னுடன் எமது பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த எனது தங்கையின்மகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு ஒவ்வொரு புத்தகமாய் எடுத்து நூலக அலுமாரியில் அடுக்கிப் பூட்டுகிறேன். அடுத்ததாக விஞ்ஞான கூடம் விஞ்ஞான உபகரணங்கள் சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்களாக மாறியிருந்தன. சில கண்ணாடிப் பரிசோதனைக் குழாய்கள் கீழே விழுந்து சிதறியிருந்தன. "எம்மா இதெல்லாம் எடுத்து பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுக்கிறீங்க?. உதடு வரை வந்த வார்த்தைகளை கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டே "தம்பி இதைக்கொஞ்சம் தாங்க ராஜா என வாங்கி வைக்கிறேன்.

ஒரு அதிபராய் அக்கல்லூரியின் நிருவாகத்தை நடாத்திய எனக்கு பார்வையாளராய் இருக்க வேண்டிய பரிதாபம். விதியை நொந்து கொண்டே மனையியல் கூடத்தை அடைகிறேன். மனையியல் உபகரணங்கள் அத்தனையும் வெளியே எடுத்துப் போடப்பட்டு உபயோகிக்கப்பட்டிருந்தன. அதை விட மேலதிகமாய் ஆசிரியர் மேசைகளும் கதிரைகளும் உபயோகிக்கப்பட்ட முறை என் நெஞ்சை உலுக்கிற்று. ஆசிரியர் மேசையில் இறைச்சியை வைத்து கத்தியால் வெட்டிக் கொண்டிருந்தார் ஒரு பெண்மணி. மேசையின் ஓரமாய் இரத்தம் வழிந்து கொண்டிருந்ததைப் பார்க்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிறேன். அந்த ஆசிரிய மேசைகளுக்கும் கதிரைகளுக்குமாய் NECORT காரியாலயத்திற்கு நான் நடையாய் நடந்தது ஞாபகம் வந்தது."லங்கா நேசன்" சேரை நேரடியாகச் சந்தித்துப் பெற்ற மேசைகள்.

""சுமார் 1800க்கும் அதிகமான ஆண் பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் கொண்ட அந்தப் பிரபல கலவன் பாடசாலை இப்பிரதேச நலன் விரும்பிகளின் உதவியுடன் எவ்வளவோ முயற்சிகளுக்கு மத்தியில் கலாசாரக் காரணங்களுக்காக புதிய கல்விச் சீர்திருத்த மீள் வியூகத்திற்கமைய ஒரே பெயர் கொண்ட கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலையாகப் பிரிக்கப்படுகின்றது. அந்தக்கலவன் பாடசாலையின் சகல வளங்களும் பிரிக்கப்படுகின்றன.ஆசிரியர்கள், மாணவர்கள், விஞ்ஞான உபகரணங்கள், மனயியல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் தளபாடங்கள் என எல்லாமே... பற்றாக்குறையாகி மாணவிகள் கீழே இருந்து படிக்கின்றனர். சுமார் 03ஆண்டுகள் தளபாடங்களுக்கு அலையோ அலையென்று காரியாலயத்திற்கு அலைந்ததில் எந்த நன்மையும் கிட்டவில்லை. ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் தலைவிதி இது என்றாலும் கடைசி முயற்சியாக NECORT அலுவலகத்தின் பணிப்பாளராய் இருக்கும் திரு லங்கா நேசன் அவர்களைச் சந்திக்கின்றேன். அவரை நேரடியாகச் சந்திக்கச் சென்றதில் எனது 4 நாட்கள் உயிர்ப்பற்றதாகி 05வது நாள் 03 மணித்தியாலங்கள் காத்திருந்து கோரிக்கையை முன்வைக்கின்றேன்

"ஏன் உங்கள் அரசியல் வாதிகள் என்ன செய்கிறார்கள்?" இதுதான் திரு லங்கா நேசன் அவர்களின் முதல் கேள்வி. அவர்கள் கவனம் எங்கள் பக்கம் இருந்தால் நான் ஏன் சேர் உங்களிடம் வருகிறேன் என உண்மையைச் சொல்கிறேன். சிரித்துக் கொண்டே எத்தனை ஆசிரியர்கள் அவர் கேட்க 30 என்கிறேன். 30 ஆசிரியர் மேசைகள் 30 ஆசிரியர் கதிரைகள் எமது பாடசாலையின் சகல மாணவிகளுக்கும் மாணவக் கதிரை மேசைகள் என தளபாடத் தேவையை பூர்த்தி செய்கிறது. ஒரு ஆசிரிய மேசையின் விலை கிட்டத்தட்ட 6500.00 ரூபாய்.

அந்த மேசையில் வழிந்த இரத்தத்தைப் பார்த்து என் இரத்தமும் கொதிக்கத்தொடங்கவே வார்த்தைகளும் சூடாக வந்து விழுந்தன. இறைச்சி கொத்த ஆசிரியர் மேசைதான் கிடைத்ததா? முறைப்புடன் என்னைத் திரும்பி பார்த்த பெண்மணி "உசிரான உசிரே போயிற்று இந்த மேசையைப் பாதுகாத்து என்ன செய்யப் போறிங்க?"

என்ன சொல்வது இவர்களுக்கு? செயலிழந்து போன கால்களை மனபலத்தில் தூக்கி வெளியே வைக்கிறேன். இனி கண்ணை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் எனது குடும்பம் இருந்த வகுப்பறைக்குள் சென்று முடங்கிக் கொள்கிறேன்.



இரவு 08.00 மணியிருக்கும் வெளியில் ஒவென்று சத்தம் கேட்க வெளியே வருகிறேன். அங்கு குழுமியிருந்த கூட்டத்தினரில் அத்தனையும் எமது பாடசாலை மாணவிகளின் பெற்றார்கள் அவர்கள் அத்தனை பேருக்கும் எனது உழைப்பும், அர்ப்பணிப்பும் தெரிந்திருந்த தைரியத்திலும், அவர்களை மீறி எதுவும் நடக்க முடியாது என்ற நம்பிக்கையிலும், என் குரலை உயர்த்துகிறேன்.

"இங்க பாருங்க இப்ப என்ன நடந்திட்டென்டு இப்படிக் கூச்சல் போடுறீங்க?" "இது பொதுச் சொத்து உங்களுடையதும் உங்கள் பிள்ளைகளுடையதும் பாடசாலை இந்தச் சாமான்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒங்களுக்கு இருக்கி. நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும் நான் இன்றைக்கு அதிபராய் இருந்து விட்டு நாளை போய்விடுவேன்" என்று கூறி முடிக்க வில்லை "நீ அதிபர் என்டா ஒன்ட அதிகாரத்தை புள்ளயல்கிட்ட காட்டனும் அதவிட்டுப் போட்டு ஆக்கள்ட காட்ட வந்தியென்டா" என்று சொன்ன ஒருவனை "என்ட கடமை நான் சொல்லிட்டன். இனி உங்கள் விருப்பம்" என் வார்த்தைகள் தடுத்து நிறுத்துகின்றன. அடுத்து இவளுக்கு வாயால் சொன்னால் சரி வராது என்று என்னை நோக்கி துப்பாக்கியை நீட்டும் ஒரு ஊர்காவலை வேடிக்கை பார்க்கிறது சுற்றி நின்ற கூட்டம், மௌனிகளாக ஒவ்வொருவராய் பின் வாங்க அத்துப்பாக்கியின் முன்பு உடலும் உயிரும் கூசிப் போக தலை குனிந்து நின்ற என் கண்களில் இருந்து "பொல பொல" வென்ற கண்ணீர்த் துளிகள் அந்த மனித நடத்தையின் எதிரொலியாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெ.மோகனதாஸ்

**விவாதம்**

> 5ம் தர புலமைப்பரீட்சை
> எந்த நோக்கத்துக்காக
> அறிமுகம் செய்யபட்டதோ
> அந்த நோக்கத்திலிருந்து
> விடுபட்ட தடம்
> மாறிச் செய்கிறது.

## 5ம் தரப் புலமைப் பரீட்சை யாருக்கு உதவுகிறது?

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை குறைந்த பொரு-ளாதார வருமானத்தை உடைய பிள்ளைகளுக்கு பண உதவி வழங்கி அவர்களை கல்வி பெற ஊக்குவிப்பதற்கு 1940களில் ய.ய கன்னங்கரா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் நாட்டில் உள்ள பிரதான மத்திய மற்றும் இடைநிலை பாடசாலைகளில் பின் தங்கிய மாணவர்கள் அனுமதி பெற்று கல்வியைப் பெற வாய்ப்பளிக்கப்பட்டது.

ஆனால் இந்த நடைமுறையில் படிப்படியாக மாற்றம் பெற்று உயர்தர வர்க்கத்தினர் பிரபல பாடசாலைகளில் இடம் பிடிக்-கும் பரீட்சையாகவும் இது மாறியது. இந்த உயர்தர மற்றும் மத்தியதர வர்க்கத்தின் சமூக அந்தஸ்தை வெளிப்படுத்தும் பரீட்சையாகவும் மாறியது. இன்னொரு தளத்தில் பிள்ளைகள் சம்பந்தப்படும் பரீட்சை குடும்ப பெற்றோர் நலன்கள் குவிய-ப்படும் பரீட்சையாக மாறியுள்ளது. அத்துடன் பாடசாலை-களை அளவிட்டு மதிப்பீடு செய்யும் தரச்சுட்டியாகவும் வலுப்-பெற்றுள்ளது.

5ம் தர புலமைப்பரீட்சை எந்த நோக்கத்துக்காக அறிமுகம் செய்யபட்டதோ அந்த நோக்கத்திலிருந்து விடுபட்டு தடம் மாறிச் செய்கிறது. அதாவது குறைந்த பொருளாதார வரு-மானத்தை உடைய மற்றும் பின் தங்கிய கிராமப் பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு நன்மை பெற்றுக் கொடுக்கக் கூடிய பரீட்சை இந்த மாணவர்களுக்கு எதுவித நன்மைகளையும் பெற்றுக் கொடுக்க முடியாமல் உள்ளது. இந்தப் பிரதேச மக்-களுக்கான, பிள்ளைகளுக்கான உரிமை படிப்படியாக பறிக்-கப்பட்டு விட்டது.

இந்தப் பின்புலம் தெளிவாகிவிட்டது. ஆனால் கல்வியில் சமூக நீதி, சமூக சமத்துவம் இல்லாமல் செல்வதற்கான ஓர் ஏற்-பாடாகவும் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை விளங்குகிறது.

இந்த உண்மைகள் அரசாங்கத்துக்கோ கல்விக் கொள்கை வகுப்பாளர்களுக்கோ புரியாமல் அல்ல. ஆனால் இவர்கள் யாவரும் வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கத்தின் அபிலாசை-களுக்கும் வாழ்வியல் மதிப்பீடுகளுக்கும் மற்றும் ஒட்டுமொத்த நலன்களுக்கும் துணை போகவே விரும்புகிறார்கள். இதில் மாற்றங்களை உருவாக்கவோ அல்லது இந்தப் பரீட்சை முறைக்கு மாற்றிடான வேறு நடைமுறைகளையோ பின்பற்றத் தயராக இல்லை.

புலமைப்பரீட்சை தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இவை எவற்றையும் கவனத்தில் எடுக்க கல்வி அமைச்சு தயாராக இல்லை. பரீட்சைத் திணைக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமும் சமூகநோக்கு, பிள்ளைகளில் எதிர்காலம் இவை எவற்றையும் கருத்தில் எடுப்பதாக இல்லை. தரமான வினாத்தாளை தயாரித்து பரீட்சை நடத்தினால் தமது கடமை முடிகின்றது என்னும் தப்பித்தோடும் மனோநிலை வலுவாகச் செல்வாக்குச் செலுத்தும் போது யார் என்ன செய்ய முடியும்?

சமூக அக்கறையுள்ளவர்கள், மாணவர்களது எதிர்காலம் பற்றி சிந்திப்பவர்கள், கல்வி சமூகநிதியை சமூக ஜனநாயகத்தை, சமூகசமத்துவத்தை வழங்க வேண்டுமென நம்புபவர்கள் யாவரும் ஒன்று கூடிச் சிந்திக்க வேண்டும். இதற்காக காலம் உருவாகியுள்ளது. ஆகவே நாம் மற்று வழி முறைகளுக்கான களங்களை அடையாளம் காட்ட வேண்டும். சுதந்திரமான சுயாதீனமான கருத்தாடல்களை உருவாக்கும் நடைமுறைக் கலாசாரம் நோக்கி முன்னகர வேண்டும். அரச கொள்கைகளை அமுல்படுத்தும் சக்திகளுடன் மட்டுமும் கூடிக் குலாவி எதையும் சாதிக்க முடியாது. காலத்தைக் கடத்தும் பண்பாடுதான் மேலெழுச்சி பெறும். இது ஆபத்தானது.

ஆகவே நாம் பின் தங்கிய கிராமப்புற பாடசாலைகளில் பயிலும் மாணவர்களது நலன் நோக்கி 5ம் தரப் புலமைப் பரீட்சையை நோக்க வேண்டும். அப்பொழுது நம்மைச் சூழும் கல்விப் பிரச்சினைகள் இன்றும் மிக நெருக்கமாகத் நமக்குத் தெரியவரும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதும் தெரியும்.

சில உதாரணங்கள் மூலம் முயற்சிசெய்வோம்.

"எனக்கு 5ம் தர புலமைப் பரீட்சை குறித்து அக்கறையில்லை நான் பாடசாலைக்குப் போவதே சாப்பிடத்தான். அங்கே தரும் சாப்பாடுதான். அங்கே தரும் சாப்பாடு எனக்கு முக்கியம்" இவ்வாறு கருத்துத் தெரிவித்த மாணவன் படிக்கும் பாடசாலை எது என்று கேட்ட போது உண்மை தெளிவானது.

அந்தப் பாடசாலை 132 வருட வரலாறு கொண்டது. ஆனால் இன்று பாடசாலை உரிய இடத்தில் இயங்கவில்லை. இடம்பெயர்வு காரணமாக எவ்வளவோ நெருக்கடிகளுக்கு மத்தியில் வேறொரு இடத்தில் இயங்குகிறது. தரம் 1 முதல் தரம் 11 வரை வகுப்புகளைக் கொண்டுள்ளது. தற்போது இப்பாடசாலையில் 52 மாணவர்கள் மாத்திரமே கல்வி கற்கிறார்கள். இடப் பெயர்வுக்கு முன்னர் 700 இற்கும் மேற்பட்டடோர் கல்வி பயின்றார்கள். அப்போது 5ம் தரப் புலமைப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைக் காட்டி வந்தது.

தற்போது 5ம் தரத்தில் 8 மாணவர்கள் மாத்திரமே கற்கிறார்கள். நாளொன்றுக்கு சராசரியாக 5 மாணவர்கள் தான் சமூகம் தருகிறார்கள். இவர்களது பெற்றோர்கள் அன்றாடம் காய்ச்சிகள். கூலி வேலைக்குச் செல்வோர். வீட்டு வறுமை கல்வியைப் பெரிதும் பாதிக்கிறது. அதைவிட பாடசாலைச் சூழலும் மகிழ்ச்சி கரமான கற்றலுக்கான ஏதுவான கவின்நிலையைக் கொண்டிருக்கவில்லை. முன்றே மூன்று ஆசிரியர்கள் தான் உள்ளார்கள்.

இது போன்ற பல பாடசாலைகளை தமிழ்ப் பிரதேசங்களில் காணக் கூடியதாக உள்ளது. வரலாற்றுச் சிறப்புகள் பாடசாலைக்கு இருப்பினும் அதனால் இன்று இந்த மாணவர்களுக்கு என்ன பயன்?சிந்திக்க வேண்டும்.

"வீதியில் போகும் மாணவர்களை பார்த்துக் கொண்டிருந்தான் அந்த மாணவன். போவோர் யாவரும் பாடசாலைக்குச் செல்கிறார்கள். இவனுக்கு படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. ஆனால் இவன் பாடசாலைக்குப் போகவில்லை. அவ்வப் போது வேலைக்குப் போகிறான். தந்தையுடன் கூடவே போகிறான். ஒரு முறை இந்தத் தந்தையுடன் பேசும் பொழுது கிடைத்த அனுபவம் எமது இன்றைய வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டியது.

தம்பி எனக்கு பிள்ளையைப் படிக்கவிடத்தான் ஆசை. ஆனால் இன்று வறுமை நம்மை மிக மோசமாகப் பாதிக்குது. தொழில் இல்லை மூன்று நேரம் முழுமையாக சாப்பிட முடியல. இன்றைக்குத் தான் கனகாலத்துக்குப் பிறகு தொழில் கிடைச்சிருக்கு. எனக்கு உதவியா இவனைக் கூட்டிட்டுப் போனா அந்தக் காசு நமக்கு மிச்சம் தானே.... என்று கூறிக்கொண்டிருந்தார்.

எந்தப் பள்ளிக் கூடம் என்று பையனை விசாரிச்ச போது.... பையனே நிறைய விடயம் சொன்னான்.

எங்கள் பாடசாலையில் 1 முதல் 5 வரை வகுப்புக்கள் உள்ளன. 36 பிள்ளைகள் தற்போது கல்வி கற்கிறார்கள் 5 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். நான் கடந்த வருடம் 5ம் தரப்புலமைப் பரீட்சை எடுத்தனான். அப்போ 3 பேர் பரீட்சை எடுத்தவர்கள். ஒருவரும் சித்திடையவில்லை.

அங்கே படிக்கிற பிள்ளைகளின் பெற்றோர்கள் பெரும்பாலும் கூலிவேலை. முன்பு போல வேலை ஒழுங்காக கிடைக்காது. இதனால் நம்மப் போல பிள்ளைகளும் வேலைக்கு ஏதும் சென்றால் தான் குடும்பத்துக்கு நல்லது. படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் எங்களால் முடியல.

இந்தக் கிராமத்தில் முன்பள்ளிகள் கூட முழுமையாக இயங்கவில்லை. சாதாரணமாக எழுத வாசிக்கத் தெரிந்து பிள்ளைகள் மிகக் குறைவாகவே உள்ளது. ஆசிரியர்களும் தமது பணிகளை மனம் வைத்துச் செய்வதாக இல்லை. மாணவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் இவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.

இவ்வாறு எமது ஊர்களில் பல பாடசாலைகளில் உருவாகிவிட்டது. இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஊர்களில் இருக்கும் மாணவர்களுக்கு நலன் பயன்விக்கும் பரீட்சையாக இருக்கும் 5ம் தரப் புலமைப்பரீட்சை எட்டாக் கனியாகவே உள்ளது. இந்த மாணவர்களது சிந்தனையிலும் உணர்விலும் நடத்தையிலும் "5ம் தரம்" அடிசறுக்கிச் செல்லும் பாதையாகவே உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமும் புறமும்

**துரை.மடன்**

அலசல்

**இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் பெரும்பாலான ஆசிரியர்கள் தமது கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றி வைக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றன. ஒரு சில ஆசிரியர்களே தமக்குரிய வாண்மைக் கடமைகளில் இருந்து தவறிவிடுகின்றனர்.**



ஆசிரியர்களுக்கும் கல்வி நிருவாகிகளுக்கும் இடையே நிகழும் முரண்கள், மோதல்கள், உராய்வுகள் இலங்கையின் கல்வி மேம்பாட்டில் தொடர்ச்சியான பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. கல்வி நிர்வாகிகள் ஆசிரியர் குழாத்திலிருந்தே உருவாகின்றனர். இவ்வாறு மேலெழும் நிர்வாகிகள் ஆசிரியர்களின் நியாயங்களை மறுதலிக்க முயல்கின்றனர். அவற்றை புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

சற்றல் கற்பித்தல் பணியை முழுமையாகவும் உன்னதமாகவும் மேற்கொண்டு பல்லாண்டுகள் பின்தங்கிய கிராமப்புற கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய ஓர் ஆசிரியர் தமது சொந்தக் கிராமத்துக்கு செல்ல விண்ணபிக்கும் பொழுது சாதகமான ஆதரவான துலங்கல் கிடைக்கப்பெறுவதில்லை. இவ்வாறு அதிருப்திக்குரல்கள் ஒலிக்கின்றன.

பொதுப் பரீட்சைகளிலே உன்னத பெறுபேறுகளை ஓர் ஆசிரியர் உருவாக்கித் தரும் பொழுது அதற்குரிய வெகுமதிகள் ஆசிரியருக்குக் கிடைக்கப் பெறுவதில்லை. அவ்வெகுமதி தனியார் கல்வி நிலையங்களுக்கே சென்று விடுகின்றது. மாறாக பெறுபேறுகளிலே பின்னடைவுகள் ஏற்படும் பொழுது முழுப் பொறுப்பியமும் குறித்த ஆசிரியர் மீது சுமத்தப்பட்டதாகக் குரல் எழுப்பும் ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் பெரும்பாலான ஆசிரியர்கள் தமது கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றி வைக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றன. ஒரு சில ஆசிரியர்களே தமக்குரிய வாண்மைக் கடமைகளில் இருந்து தவறிவிடுகின்றனர். ஆனால் மேலதிகாரிகள் தமது உரைகளில் ஒட்டு மொத்தமாக அனைத்து ஆசிரியர்களையும் சாடுதல் ஆசிரியர் நிர்வாகிகள் உராய்வை மோதலை மேலும் வளர்க்கின்றது.

இச்சந்தப்பத்திலே பிறிதொரு முரண்பாட்டையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தலைசிறந்த பேச்சாளர்கள் மற்றும் பிரசங்கிகள் என்று கருதப்படுவோர் தமது சாகச உரைகளில் ஆசிரியர்களைக் கிண்டல் செய்வதும் அவர்களை நகைப்புக்குரியவர்களாகச் சுட்டுதலும் வழக்கமாகி வருகின்றது. இவ்வாறான கெடுதலான செயல் இந்நாட்டின் பிரசங்கத் தமிழ்ப் பண்பாட்டுக்குரிய தனித்துவமாகவும் காணப்படுகிறது.

கல்வியியலில் நிகழும் பதவி உயர்வுகளில் அரசியல் தலையீடுகள் இருந்து வருதலை பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரியா

தொடக்கம் சமகால ஆய்வாளர்கள் வரை தக்க ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி வருகின்றனர். அதாவது கல்வித் துறையில் ஓர் ஆசிரியர் பதவி உயர்வைப் பெற்றுக் கொள்வதற்கு சேவை அர்ப்பணிப்போ, உன்னத கற்பித்தல் திறன்களோ முக்கியமானவை அல்ல. அரசியற் பின்புலமே முக்கியமானதாக அமைந்துவிடுகின்றது. அவ்வாறு பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்வோர் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஆசிரியர்களை அதிகாரக் கரங்களால் அவர்கள் சாடும் பொழுது மேலும் சிக்கலும் முரண்களும் மனமுறிவுகளும் ஏற்படத் தொடங்குகின்றன.

இலங்கையிலே இலகுவாக அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்படக் கூடிய பணியாளர்களாக ஆசிரியர்களே இருக்கின்றனர். அழுத்தங்கள் நேர சூசி வழங்குதலில் இருந்தே ஆரம்பிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. ஆசிரியர்களின் ஆற்றல்களுக்கும் அனுபவங்களுக்கும் உரிய நேரசூசி கொடுக்கப்படாது விடப்படும் பொழுது மாற்று நடவடிக்கைகளை ஆசிரியர் மேற்கொள்வாராயின் அது மேலும் பாதகமான நிலையையே அவருக்கு ஏற்படுத்தி விடும்.

கல்வி நிர்வாகத்திலே தவறுகள் நிகழ்வதை ஆசிரியரால் எளிதிற் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால் அவற்றை ஓர் ஆசிரியர் ஆக்கபூர்வமாகச் சுட்டிக்காட்டுவாராயின் அதுவும் அவருக்குப் பாதகமான நிலையையே உருவாக்கிவிடும். நலம்மிக்க திறனாய்வுகளுக்கு முகம் கொடுக்கப் பழக்க மற்ற நிலையில் நிர்வாகிகள் இருப்பதாக ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கல்வி நிர்வாகம் என்பது அபிவிருத்திக்குரிய நிர்வாகம் என்பதைப் பல நிர்வாகிகள் இன்னமும் அறிந்து கொள்ளவில்லை. காலனித்துவ காலத்துக் கச்சேரி நிர்வாகம் போன்று இறுகிய நிலையிலேயே கல்வி நிர்வாகம் இருப்பதாகக் குறைப்பட்டுக் கொள்ளும் ஆசிரியர் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

பாடநூல்கள் வழிகாட்டிகள் உரிய வேளையிலே கிடைக்காத நிலையிலும் தாழ்ந்த வறுமை நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவர்க்கு உதவுவார் இல்லாத நிலையிலும் பாடசாலையில் அடிப்படை அமைப்பு வசதிகள் இல்லாத நிலையிலும் தளராது பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உற்சாக மூட்டக்கூடிய நிர்வாக அமைப்பு வசதிகள் இல்லாத அவல நிலைகளும் கல்வி நிர்வாகத்தின் ஈடு செய்ய முடியாத இடைவெளிகளாக உள்ளன.

கல்வி வரலாறும் ஆசிரியத்துவ வரலாறும் வேறுபிரிக்க முடியாதவை ஆனால் எமது நடைமுறையில் இவை வேறு பிரிக்கும் பண்புகளையே பெரும்பாலும் சுத்தி நிற்கின்றன. இந்த மரபை வலுப்படுத்தும் வகையில் கல்வி நிர்வாகிகள் தொழிற்படுகின்றனர். இதனால் இவர்களுள் உள்ளியங்கும் ஆசிரியம் படிப்படியாக நாளடைவில் சாகடிக்கப்பட்டுவிடுகிறது. அதிகார அரசியலுக்குள் பலியாகிப் போகிறார்கள்.

ஆசிரியர் வாண்மை மேம்பாட்டுக்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை ஆசிரியர் சேவையில் பண்பு சார் விருத்திக்குரிய நவீன கோலங்களை உருவாக்குவதில் தவறிவிடுகின்றனர். இதற்கான காரணங்களை ஆராயப் புகும் பொழுது கல்வி நிர்வாக மட்டத்தில் இழையோடும் அதிகார மமதை, அசத்தை இனம் கல்வியின் தரவிருத்தி பற்றிய அக்கறை இன்மை மற்றும் சமூகப் பொறுப்பற்ற தன்மை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

உதாரணமாக சமகாலத்தில் நடைபெறும் கல்வி செயலமர்வுகள் பல நீண்ட திட்டமிடல், உரிய மனித வள ஒதுக்கீடு, அறிவுப் பகிர்வு போன்றவை தெளிவாக இருப்பதில்லை ஏதோ செய்து முடித்தால் போதுமென்ற மன உணர்வு தான் நிலவுகிறது. இதனால் மாற்றங்கள் பெரிதாக உருவாக முடியவில்லை. ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையில் முரண்பாடுகள், உராய்வுகள் தொடர்ந்து கொண்டு தான் உள்ளன.

இன்று கல்வி நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு கல்வியும் தெரியவில்லை முகாமைத்துவமும் தெரியவில்லை. இதனால் பல்வேறு குளறுபடிகள் முரண்கள் தான் தோன்றி வருகின்றன. இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் தான் சமூகத்தில் ஒழுங்கு ஒழுக்கம் நேர்மை போன்ற பங்குசார் விருத்தி போன்ற தலைவர்களை ஆசிரியர்கள் தான் உருவாக்குகிறார்கள். ஆனால் எமது சமகால கல்வி நிருவாக மரபில் வந்தவர்களுக்கு ஏனோ மேற்குறித்த பண்புகள் கையளிக்கப்படாது போய்விட்டது. இதனால் நிறுவனங்கள் தனிநபர்கள் பிழையான முன் மாதிரிகளை உருவாக்கின்றனர். கல்வி நிர்வாகம் அபிவிருத்திக்குரிய நிர்வாகம் என்ற நிலையில் இருந்து மாறிவிட்டது. இதனால் மோசமான எதிர்விளைவுகளையே நாம் முகம் கொடுக்க நேர்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் அதிபர் ஆசிரியர்களுக்கான ஒக்டோபர் வாசிப்பு மாதத்திற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

திருமதி

ஆ.கரீம் அதிபர் தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூர)

மூதூர் அகவிழி வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிபர் ஆசிரியர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு 2008-11-06ஆந் திகதி காலை 9.30 மணிக்கு தி/ அந் நஹார் மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியது. இவ்விழிப்பூட்டல் கருத்தரங்கின் தொனிப் பொருளாக "ஆசிரியத்துவமும் வாசிப்பும்" என்ற தலைப்பில் இடம் பெற்றது.

மூதூர் அகவிழி வட்டத்தின் இணைப்பாளரான தி/ மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ஆ.கரீம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வு மூதூர் பதில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.மு.ஆ.மன்சூர் அவர்களின் அனுமதியுடனேயே நிகழ்ந்தது. பிரதம விருந்தினராக நிர்வாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு A. குணராசரட்ணம் அவர்களும் வளவாளர்களாக அகவிழி பிரதம ஆசிரியர் திரு தெ. மதுசூதனன் அவர்களும் மற்றும் மூதூர் அகவிழி உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தார்கள். இக்கருத்தரங்கில் சுமார் 75க்கும் மேற்பட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த திருமதி ஆ. கரீம் அவர்கள் அறிவியல் சஞ்சிகைகள் தொடங்கிய சிறு காலத்திற்குள்ளாகவே முகவரி தொலைத்து நிற்கும் இக்காலத்தில் 4 ஆண்டுகளையும் தாண்டிய அகவிழியின் நின்று நிலைத்திருக்கும் தன்மை அதன் அர்ப்பணிப்பு ஆற்றலும் வாண்மைத்தகுதியும் பெற்ற ஆசிரியர் குழாத்தையே சாரும் என்றார். தொடர்ந்தும் கருத்தரங்குக்கு சமூகமளித்த அதிபர் ஆசிரியர்களை நன்றி கூறி வரவேற்ற அவர் இந்த மூதூர் அகவிழி வட்டம் மேலும் அகன்று மூதூர் கல்விச் சேவைக்கு தன்னால் இயலுமான சேவையை தாம் சார்ந்து வாழும் சமூகத்திற்கு தன்னலமின்றி வழங்குவதற்கு அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றார். மேலும் புதிதாக உறுப்பினர்களை இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததுடன், அகவிழியானது ஆசிரியர் வாண்மை விருத்தியில் செலுத்தும் ஆளுகை பற்றி கடந்த 4 ஆண்டுகளாக அகவிழியிலிருந்து ஒரு சில தலைப்புக்களை எடுத்து விளக்கினார்.

"அடுத்து 21ம் நூற்றாண்டுக்கான மாணவரை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கை அறிந்து கொள்ளல்." என்ற தலைப்பில் தி/ அந்-நஹார் மகளிர் மகாவித்-











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாலய தமிழ் ஆசிரியரும் அகவிழி வட்டத்தின் பொருளாளருமான T.M. பௌசி அவர்கள் அகவிழி என்ன கூறுகின்றது என்பதனை சஞ்சிகையி-லிருந்து எடுத்துக்கொண்ட கருத்துக்களின் ஊடாக சிறப்பாக முன்வைத்தார்.

அடுத்து மூதூர் வலையக்கல்வி அலுவலகத்தில் தமிழ் பாடத்திற்கான உதவி வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் ஜனாப் ஹாஜாமுகைதீன் அவர்களி-னால் 'ஆசிரியர்கள் இன்று எதிர்நோக்கும் சவால்களை ஆக்க பூர்வமாகத் தீர்த்துக்கொள்ள தக்க ஆளுமையை விருத்தி செய்து கொள்ளல்' தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்து பிரதிக் கல்விப் பண்பாளர் குணராசரட்ணம் அவர்கள் ஆசிரியர்கள் ஆளுமை உள்ளவர்களாகவும் வெற்றிகரமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில ஈடுபடக்கூடியவர்களா-கவும் இருக்க வேண்டுமானால் வாசிப்பில் அதிகம் ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். தமது காலத்தில் ஆசிரியர்கள் எப்படியிருந்தார்கள் என்பது குறித்து சில உதாரணங்கள் மூலம் விளக்கினார்கள்.

இச்செயலமர்வின் மையப்பொருள்ள அகவிழி பிரதம ஆசிரியர் தெ.மதுசூதனன் அவர்கள் நடாத்திச் சென்றார். "தரமான வாசிப்புக்கு முழுமையான வாசிப்பை பயன்படுத்தி தக்க திறனைப் பெறுதல்" என்ற தலைப்பில் தமது சிறப்பான பார்வையை முன்வைத்த அவர்கள்........

தமது பேச்சின் தொடக்க உரையில் "சூழல் மட்டும் மாசடைவதில்லை. இன்று அறிவுச் சூழலும் மாச-டைந்து கொண்டிருக்கிறது" பிரதானமாக வாசிப்பு குறைவின் காரணமாகவும் தேர்ந்தெடுத்து வாசிக்-காததின் மற்றும் தொலைக்காட்சியின் தொல்லையி-னாலும் தான் இன்று நாம் இத்தகைய நிர்கதிக்-குள்ளாக்கப்பட்டிருக்கின்றோம் என்று கூறினார். கல்-விச் சூழலில் இருந்து பல்வேறு அனுபவங்களை யாவருக்கும் பெரும் தாக்கம் ஏற்படும் வகையில் முன்வைத்தார். அவரது அணுகுமுறையும் பார்வையும் எதார்த்தை தெளிவாக எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்தது.

இன்றைய சமூகத்தில் வாசிப்போரை எவ்வாறு வகைப்படுத்தலாம் என்று ஒரு மாதிரி வகைப்படுத்-தலைக்கூட முன்வைத்தார். 'தரமான கல்விக்கு தரமான வாசிப்பு' முக்கியம் என்பதை எடுத்துரைத்தார். ஒரு விழிப்புணர்வு ஏற்படுவதற்கான செயலமர்வாக வளர்த்துச் சென்றார்.

ஆகவிழி ஆசிரியர் தமது ஆற்றொழுக்கான பேச்சி-னால் சகல ஆசிரியர்கள் அதிபர்களின் கவனத்தையும் ஈர்த்தார். மூதூர் மத்திய கல்லூரி நூலகரும் மூதூர் அகவிழி வட்ட உறுப்பினருமான ஆ.முஜீபுர் ரஹ்மான் மூதூர் தி/ அலஹிலால் மத்திய கல்லூரி நூலகர் S.A. முகீர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சமகால கல்விச் சமூகம் பற்றிய கருத்தாடலுக்கான களம் விரிந்தது. குறிப்பாக இறுதியில் அதிபர் ஆசிரியர்களுடன் அகவிழி ஆசிரியர் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்-தனார். இதுபோன்ற பல அறிவியல் கருத்தரங்குகள் மூதூர் அகவிழி வட்டத்தினரால் மென்மேலும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் வரவேற்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மூதூர் அகவிழி வட்டத்தின் பிரதித் தலைவர் திருமதி முஹனா மூசீன் அவர்களினால் நன்றியுரை நிகழ்த்-தப்பட்டு சுமார் 1.30 மணிக்கு கருத்தரங்கு இனிதே முடிவுற்றது.

**மூதூர் அகவிழி வட்டத்தின் நிர்வாகக் குழுவும் உறுப்பினர்களும்**

திருமதி ஆ. கரீம் இணைப்பாளர்
அதிபர்
தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி
ஆலோசகர் S. சிறீதரன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி அபி-விருத்தி)
வலயக்கல்வி பணிமனை
திருமதி ஆ.மூசீன் பிரதித் தலைவர்
அதிபர
தி/ அந்-நஹார் மகளிர் மகாவித்தியாலயம்
செயலாளர்:- A.J.M. ஜபார் உதவிக் கல்விப்-பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
மூதூர்
உபசெயலாளர் திருமதி P. உமா
ஆசிரியர் ஆலோசகர்
வலயக்கல்வி பணிமனை
மூதூர்
பொருளாளர்:- T.பௌசி
ஆசிரியர்
தி/ அந்-நஹார் மகளிர் மகாவித்தியாலயம்
மூதூர்
உறுப்பினர்கள் திருமதி B. இராச முகம்மது
தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி
திருமதி ஆ.மஹரூப்
தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி
திரு S.A. முகீர்
நூலகர்
தி/அல்ஹிலால் மத்திய கல்லூரி
திரு ஆ. முஜீபுர் ரஹ்மான்
நூலகர்
தி/அல்ஹிலால் மத்திய கல்லூரி
திரு மகாதேவன்
ஆசிரியர்
தி/கிளிவெட்டி மகாவித்தியாலயம்
திருமதி ஜீனைட்
தி/ அலஹிலால் மத்திய கல்லூரி
மூதூர்


திருமதி ஆ. கரீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுபதி நடராசாவின்,-

# ஒரு குளிர் நிலவுக்கு விழிநீர் அஞ்சலி



'மனோ' - உங்களுடன் பழகிய நாட்கள் நெஞ்சைவிட்டகலா நிலையில் உங்களைப் பற்றிய நினைவுகளுக்காக வார்த்தைகளைத் தேடுகின்றேன். மன்று - ஏன் ஐயா இப்படியொரு பேரைத் தேர்ந்தெடுத்தீர்கள். அது 'நடா' - மன்றம் என்பதன் குறுக்கம். எதையும் மனம் திறந்து பேசக்கூடிய எல்லைகளற்ற இடம் ஒன்றுக்காக இதனைத் தேர்ந்தெடுத்தோம்.

இன்று மட்டக்களப்பில் சூழலியலின் மறுவடிவமாக்கி விட்டீர்கள் மன்றுவை. 1990களில் யாரோ என்னைப்பற்றிக் கூறக்கேட்டு எனது அலுவலகத்துக்கு வந்து என்னைச் சந்தித்தீர்கள். அப்போதிருந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களான திருமதி ஜெயராசா, முருகமூர்த்தி பற்பராசா - என்று பலரும் சேர்ந்து உங்களோடு இணைந்திருந்தோம்.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்து வீதியிலிருந்த வீடொன்றில் நமது சந்திப்புக்கள் கூட்டங்கள் ஆலோசனைகள் தொடர்ந்தன. 'மன்று'- சூழல் சார்ந்த விடயங்களுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது என்பதில் நீங்கள் ஆர்வமாக இருந்தீர்கள்.

இளைஞர், யுதவதிகளுக்கான தொடர்வதிவிடப் பயிற்சிகளை ஊறணி 'மன்றேசா' இல்லத்தில் வழங்கினீர்கள். அதில் பயிற்சி பெற்ற பலர் இன்று உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்வில் சிறந்து விளங்குவதையும் நீங்கள் அறிவீர்கள்.

உங்களது வாழ்வுப் புலம் பற்றிய எந்தவித அறிவும் எங்களுக்கு அப்போது இருக்கவில்லை. ஆனாலும் உங்கள் மைத்துனர் டாக்டர் சதானந்தனுடன் நீங்களும் மட்டக்களப்பில் ஆரம்பித்த பணிகள் மறந்துவிட முடியாதவைகளாகும்.

மட்டக்களப்பில் ஒரு பிரதேசப்பத்திரிகை வெளிவர வேண்டும் என்று விரும்பினீர்கள். ஊடகம் சார்ந்த அனைத்து நண்பர்களையும் நான் அழைத்தேன்.

அமரர் வீ. சு. கதிர்காமத்தம்பியைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு 'விடிவானம்' பத்திரிகை வெளிவரலாயிற்று. இதனைத் தினப்பத்திரிகையாக்க விரும்பினீர்கள். அது 'தினக்கதிர்' ஆக உதயம் பெற்றது. மட்டக்களப்பின் ஊடகத்துறை வரலாற்றில் நீங்கள் ஊடகத்துறை நண்பர்களுடன் இணைந்து பயிற்சிகளும், உதவிகளும் செய்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு இறுதியில் கையையும் சுட்டுக்கொண்டீர்கள்.

மன்றுவை புத்தெழுர்ச்சி பெறத்தூண்டினீர்கள். 'சூழல் சுடர்' - மாத இதழ் தொடர்ந்து வெளிவரலாயிற்று. அதன் 50 ஆவது பொன்னிதழ் புதுப்பரிமாணம் பெற்று வெளிவந்து சாதனை படைத்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து அரச செயலகங்களிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் எழுதாவரைவாக சூழலின் அதிகாரச் சின்னமாக மன்று திகழப் பண்ணினீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கும் நிழலுக்கும் சாலையோர மரம் நடுகை, உயிரின வளர்ச்சிக்காக நீர்நிலை கண்ணாக்காடு வளர்ப்பு, காற்றுத் தடைக்காக கடற்கரையோர சவுக்கு மரத்தோட்டம் என்று அழகூட்டலும் பயன் பெறலுமான பலநிகழ்வுகளையும் நடத்திக் காட்டினீர்கள். கிழக்குப் பல்கலைக்கழகம், விவசாயத்திணைக்களம், வன இலாகா, மீன்பிடித்திணைக்களம் உள்ளூராட்சி சபைகள், உள்ளூராட்சி திணைக்களம் முதலான அனைத்து நிறுவனங்களையும் கூட்டிணைத்து சேவையாற்றத் தூண்டினீர்கள்.

இடைக்காலத் தொய்வின் பின் மன்று இன்றைய நிலைக்கு உயர வித்திட்டீர்கள். இன்று பாலைவனப் பசுஞ்சோலையாக (Oasis - Plant Nursery) இன்று கிரான்குளம் பண்ணைகள் உங்கள் நினைவின் சான்றாதாரங்கள்.

காட்சி மாறுகிறது. வட கிழக்கு மாகாண மட்டத்தில் சேவையாற்ற முனைகின்றீர்கள். சாந்தி சச்சிதானந்தம் - அதுகாலவரை மேற்கொண்டு வந்த சேவைப்பணிகளில் புதிய திருப்பம் ஏற்படுகிறது.

விழுது - ஆற்றல் மேம்பாட்டு மையம் உருவாகிறது. சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறீர்கள். கல்வி, பெண்கள் துறைகளைத் தெரிவு செய்கிறீர்கள், அதன் முகாமைத்துவ ஆலோசனை வழிகாட்டியாகத் திகழ்கிறீர்கள்.

'அகவிழி' ஆசிரியத்துவ நோக்கு மாத இதழ்; 'கூடம்' : காலாண்டு இதழ், 'இருக்கிறம்' - சனரஞ்சக இதழ்களும், அறிவூட்டும் சிறு நூல் பிரசுரங்களும் வெளிவருகின்றன.

'அகவிழி' - முதல் இதழை நாமிருவரும் சுமந்து கொண்டு திருகோணமலை, மட்டக்களப்பு பட்டிருப்பு, வாழைச்சேனை, கல்முனை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை என்று அனைத்து இடங்களுக்கும் சென்று பல நிருவாகிகளையும் சந்தித்து (அகவிழியை) இலவசமாக வழங்கி எதிர்காலத்தில் வேண்டிய ஒத்துழைப்புக்கு வழிகாட்டினீர்கள். யாழ்ப்பாணம் - வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை என்று சந்துபொந்துகளில் எல்லாம் நீங்கள் அகவிழியைச் சுமந்தீர்கள். மதுவும் துணையிருந்தார்.

ஒவ்வொருவரும் தத்தமது கருமங்களைச் செய்யும் போது அவ்வச் செயல்களினூடாகத் தமது இருப்பை வெளிப்படுத்தியும் நிலைநாட்டியும் கொள்ளவே ஆசைப்படுவர்; அதற்கான வேலைகளிலும் ஈடுபடுவர். ஆனால் நீங்கள் இதற்கு முற்றும் மாறுபட்டவராக காட்சியளித்தீர்கள். இன மத மொழி பிராந்திய வேறுபாடற்று மனித நேயப் பண்புகளுடன் செய்கருமங்கள் அனைத்தையும் சமூகத்துக்கே அர்ப்பணித்துக் கருமமாற்றி வந்தீர்கள். செய்கருமங்கள் யாவற்றையும் ஈஸ்வரனுக்கு அர்ப்பணிப்பது ஞானப் பண்பு. நீங்கள் மனிதரை, இறைவனாக்கி அர்ப்பணித்துப் பார்வையாளராக செயற்பட்ட உயர்பண்பு மற்றையோரார் கற்றுணரப்பட வேண்டியவைகள்.

தமிழ்ச் சங்கத்தில் 'அகவிழி' 50 ஆவது இதழ் வெளியீட்டில் நீங்கள் படுக்கையில் விழுந்துவிட்டீர்கள். 'சாந்தி' - அவசரம் அவசரமாக சங்கத்தில் உரையொன்றைச் செய்து விட்டு உங்களைப் பார்ப்பதற்குப் பறந்தோடி வந்ததை நான் அங்கிருந்து கனத்த இதயத்துடன் அவதானிக்க வேண்டிய துரதிர்ஷ்டம் வந்துவிட்டது.

நீங்கள் நாட்டை, மக்களை, இயற்கையை - ஜீவராசிகளை - பஞ்ச பூதங்களையும் எவ்வளவுக்கு எவ்வளவாக நேசித்தீர்கள். அவைகளின் இருப்பை நிலை நிறுத்த எத்தனை பாடுபட்டீர்கள்.

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*

*பெருமையுடைத்திவ்வுலகு"*

**மனிதனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது**

**வெளியின் புஸ்பத்தைதப் போல் பூக்கின்றான்**

**காற்று அதன் மேல் வீசியவுடனே**

**அது இல்லாமல் போயிற்று.**

**இனி அது இருந்த இடமும் அதை அறியாது - ஆயினும்**

'மனோ' - நீ ஒரு குளிர் நிலவு. அது இருளை அகற்றியது; பூரணையானது.


'மனோ' - இருந்த இடம் மன்று, விழுது - ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி இருந்த இடத்தைக் குளிரப் பண்ணுவதாக.

-ஓம் சாந்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பக்கம்



1. அகவிழி 50 சிறப்பிதழ் பார்த்தேன் சந்தோசமாக இருந்தது. தொடர்ச்சியாக இதழ் வந்து கொண்டேயிருக்கிறது. ஆரம்பத்தில் நினைத்தேன் இடையில் நின்றுவிடுமென்று ஆனால் அகவிழி 50 ஐ தாண்டிவிட்டது. இதற்கு எனது பாராட்டுக்கள்.

'ஆசிரியத்துவமும் வாசிப்பும்' சிறப்புப் பகுதி அருமை. ஆனால் நடைமுறையில் அதிகம் வாசிக்காதவர்கள், வாசிப்பு அற்ற கூட்டமாக பெருகி வருவது ஆசிரியர்கள் மத்தியிலிருந்து தான். நான் ஒரு ஆசிரியர் என்ற வகையில் இதை அடித்துக் கூறுவேன்.

நான் 1980களில் இருந்து ஆசிரியர் சேவையில் உள்ளேன். இதுவரை வெவ்வேறுபட்ட ஆறு பாடசாலைகளில் கற்பித்து வருகிறேன்.

வாசிக்காமல் வகுப்பறைக்கு செல்லக் கூடாது என்னும் நிர்ப்பந்தம் எனக்கு உருவாகவில்லை. எமது கல்விச் சூழலும் நமக்கு வாசிப்பை அவசியப்படுத்தும் கலாசாரத்தை உருவாக்கவில்லை. இந்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் வாசிப்பை தூண்டுவார்களா? வாசிப்புக் கலாசாரத்தை உருவாக்குவார்களா? யோசிக்க வேண்டும்.

எனது வீட்டுச்சூழல் ஆரம்பம் முதல் வாசிப்பு ஆர்வத்தை எனக்குள் வளர்த்திருந்தது. இதனால் ஓரளவு வாசிப்பு அனுபவம் இருந்தது. இது பின்னர் இடையில் காணாமல் போய்விட்டது. கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர். எனது "வகுப்பறைச் சூழல்" ஒன்றுதான் எனக்கு படிக்க வேண்டிய ஆர்வத்தை தூண்டியது. அந்த வகுப்பில் இருந்த சில மாணவர்கள் தான். அவர்கள் எழுப்பிய கேள்விகள் தான் என்னை வாசிக்கத் தூண்டியது. தற்செயலாக அகவிழியை பார்க்க நேர்ந்தது. இன்றுவரை தொடர்ந்து அகவிழி வாசகனாக இருக்கிறேன். ஆனால் அகவிழி ஆசிரியர்களது சிந்தனையிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலும் எவ்வாறு மாற்றங்களை உருவாக்கிறது என்பது தான் பெரும் சவாலாக உள்ளது. என்ன செய்யலாம்?

*சி. இராஜ்குமார், ஆசிரியர், கொழும்பு.*

---

எங்கள் பாடசாலையில் கடந்த இரு ஆண்டுகளாக் கணித ஆசிரியர் இல்லை. வரவிருக்கும் க.பொ.த.சா.தரப் பரீட்சையை (2008) மாணவர்கள் எழுதப் போகிறார்கள். கணித ஆசிரியரின்றி நிலைமை தொடர்ந்ததால் எமது கல்வித்தரம் எங்கே உள்ளது? எப்படி எதிர்பார்ப்பது?

*திருமதி கனகராசா, ஆசிரியர், மூதூர்.*

---

"ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம்" கட்டுரை சிறப்பாக உள்ளது. மாறிவரும் ஆசிரியர் பணி எவ்வாறு அமையும் என்பதை இனங்காண முடிகிறது. மரபு சார்ந்த 'கற்பிப்போன்' என்னும் வகிபங்கு மாற்றமடைகிறது. உண்மை தான். ஆனால் நடைமுறையில் இந்தக் கணம் வைர ஆசிரியர் நிலைமாற்று வகிபங்கு மாற்ற-முற்றுள்ளதா? இல்லை. இவையெல்லாம் வெறும் சிந்தனைகளாக அத்துடன் மேற்படிப்புச் சமாச்-சாரங்களாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால கல்வி நிருவாகச் சூழல், கலாசார மரபு ஆசிரியர் நிலைமாற்று வகிபங்கினை செவ்வனே ஆற்றுவதற்கான பண்புகளை ஜனநாய நடைமுறைகளைக் கொண்டுள்ளனவா? இல்லை. ஏன்?

நமது தத்துவங்களுக்கும் நடைமுறைக்கும் இடையில் பெரும் இடைவெளிதான் உண்டு.

பா. சிவகுமார், ஆசிரியர், திருகோணமலை.

---

இன்று ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வாண்மைத்துவம் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் புதிய கல்விக் கொள்கைகள் என பல விடயங்களால் எழுதப்படுகின்றன. ஆனால் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரச்சினைகளை முகங் கொடுக்கின்றார்கள். இவை பற்றியெல்லாம் யாரும் அக்கறைப்படுவது இல்லை.

நான் அகவிழியைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். ஆனால் எனக்கு முழுமையான திருப்தியைத் தரவில்லை. கட்டுரைகள் எழுதக் கூடிய யாவரும் ஒரு குறித்த புள்ளியின் நேர்கோட்டில் இருந்துதான் தமது பார்வையைச் செலுத்துகிறார்கள். இதனால் நடைமுறைக் கல்விப் பிரச்சினைகள், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சவால்கள் துல்லியமாகப் பிடிபடாமல், யாவரும் நழுவிச் செல்லும் பாதுகாப்பான நடைமுறை முகாமுக்குள் தஞ்சம் அடைகின்றார்கள்.

சமகால கல்வியின் சமூகப் பரிமாணங்கள் முழுமையாக வெளிப்படாமல் உள்ளது. கல்வியின் தரம் தாழ்ந்து செல்வதற்கான காரணிகளை கண்டுணரும் அல்லது வெளிப்படுத்தும் பாங்கு மிகக் குறைவாகவே உள்ளது. இந்தப்பார்வை சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் இந்தக் கருத்து வெளிப்படையான உண்மை.

ஆரம்பத்தில் இருந்து அகவிழி விமரிசனக் கல்விக்கான அடிப்படைகளை வழங்குவதில் தவறு விட்டிருகிறது. ஆசிரியர் கல்வியின் சமகால முற்போக்குச் செல்நெறி பற்றிய கருத்தாய்வுக்கான களம் இன்றும் இன்னும் இனங்காணப்பட்டவில்லை. இதற்கான சாதகமான கருத்துச் சூழல் விரிவு பெறும் பொழுது தான் காத்திரமான மாற்றங்களை உருவாக்க முடியும்.

அகவிழி ஆசிரியர் எந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே 'மாற்றங்களை விளைவிக்கும்' 'விமரிசனச் சூழல் விரிவு பெறும்' தன்மைகள் பெருகும் இதழாக அகவிழி வரட்டும். ஆசிரியர்களின் பரீட்சைக்கு உதவுவது அல்லது மேற்படிப்புக்கு உதவுவது அகவிழியின் முதன்மை நோக்கமாக இருக்கக் கூடாது.

அகவிழி 50 இதழ்களைக் கண்டுவிட்டது. இனி தனக்கான தனித்துவக் குரல் மூலம் சிந்தனை மூலம் விமரிசனச் செயற்பாட்டுக்கு களம் அமைக்கும் இதழாக வெளிவரட்டும்.

அகவிழி ஆசிரியருக்கு உரிமையுடன் எழுதும் சகபாடி.

ச. செல்வக் குமாரன்

ஆசிரியர் - யாழ்ப்பாணம்.

---

இன்று கல்வி ஒரு பொருளாதார முதலீடாகவும் அதிக விளைவுகள் தரும் தொழில் துறையாகவும் இனங்காணப்பட்டுள்ளது. இந்த உண்மையை எடுத்துரைக்கும் நோக்கில் மா.சின்னத்தம்பியின் கட்டுரை கடந்த இதழில் இடம் பெற்றிருந்தது.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்து நவீன கல்வியின் பரவலாக்கம் வளர்ச்சி மேற்குறித்த பின்புலத்துக்கான சாதகமான சூழல்களை உருவாக்கியுள்ளது. இதனால் கல்வி கற்றவர் என்பது ஒரு முதலீடாக நோக்கக் கூடியவர். எவ்வளவு பட்டங்கள் சான்றிதழ்கள் அதிகமாக உள்ளதோ அவருக்கான கேள்வி, தகுதி சந்தையில் அதிகம். திருமணச் சந்தையும் இதற்கு நன்கு பொருந்தும். அதிகமாகச் கல்வி கற்கும் வாய்ப்பு உடையவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதில் அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள். தமிழர்களின் புலம் பெயர்வதில் கல்விக்கு முக்கியமான இடமுண்டு. 1958 கலவரத்துக்கு பின்னர் 1960களில் புலம்பெயர்ந்தவர்களுள் நன்கு படித்தவர்கள் பெரும்பாலும் அதிகமாக இருந்தனர். 1980கள் வரை இந்த மரபு தொடர்ந்தது. 1983க்கு பின்னர் பலதரப்பட்டவர்கள் சென்றார்கள். இருப்பினும் 'கல்வி' கற்றவர்கள் குடிபெயர்வுக்குச் சாதகமான பண்புகளைக் கொண்டுள்ளார்கள். இன்றுவரை இந்தப் பண்பைக் காணலாம்.

ஏ. பெஞ்சமின்

ஆசிரியர், நீர் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிழி

AHAVILI
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) :

கற்பிக்கும் பாடசாலை :

பாடசாலை முகவரி :

தொலைபேசி/தொலைநகல் இல. :

மின்அஞ்சல் முகவரி :

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி :

இத்துடன் ரூபா ______ க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல ______ இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்;

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனி இதழ் | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை | 7000/- |
| உள் அட்டை (முன்) | 6000/- |
| உள் அட்டை (பின்) | 5000/- |
| உள் பக்கம் | 4000/- |
| நடு இருபக்கங்கள் | 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
19, Saravana Road, Kallady Batticaloa
Tel: 065-2222814



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வெளியீடுகள் - 2008




சேமமடு

# சேமமடு பொத்தகசாலை
# CHEMAMADU BOOK CENTRE

Tel: 011-247 2362,232 1905 Fax: 011-244 8624
E-Mail: chemamadu@yahoo.com
UG 49, 50, People's Park, Colombo 11, Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் செண்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

அருணா ஸ்ரோஸ்
38, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.
தொ.பே.இல: 077-4728883

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

அபிஷா புத்தகக் கடை
137, பிரதான வீதி,
தலவாக்கல.
தொ.பே.இல: 052-2258437

அருள் ரேட் செண்டர்
19, பிரதான வீதி,
தலவாக்கல
தொ.பே.இல: 052-2258584

எம்.ஐ.எம். ஷியாட்
46, கோட்ஸ் வீதி,
மாவனெல்ல, 71500
கை.தொ.இல: 0777-065123

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 0777-222366

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
19, சரவணா வீதி, கல்லடி
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-2222500

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 0777-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

எம். சண்முகராஜா
56, பதுலுசிறிகம
பதுளை
தொ.பே.இல: 055-2229137/072408521

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0777-840318

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, நாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
07777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

ஜோதி புக் செண்டர்,
கிரான் பாஜார்,
மன்னார்
தொ.பே.இல: 023- 2222052

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org